

# திறவுகோல்

2055 | ஆவணி

மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# பெண் கவிஞர்கள் பார்வையில் புதுமைப்பெண் உருவாக்கம்

பெண்ணைப் பெண்ணாக உணர்தல் மற்றும் உணர்த்துதல் பெண்ணிய இலக்கியத்தின் தலையாயக் குறிக்கோள்களாக உள்ளன. சமூகத்தில் ஆணுக்கு வழங்கப்பட்டிருக்கும் அத்தனை உரிமைகளையும் பெண் தனக்கும் வேண்டுகிறாள். பெண் அடிமையாகவும் வாழ விரும்பவில்லை. தெய்வமாகவும் இருக்க விருப்பமில்லை. எப்போதும் மனுசியாக மதிக்கப்படுவதையே ஆசைக்கொள்கிறாள். அவளுடைய மனம் சுதந்திரத்தை எதிர்நோக்குகிறது. அவளுடைய அறிவு அடிமைத்தனத்தை எதிர்க்கிறது. பெண் மரபுகளை மறுவாசிப்பிற்கு உட்படுத்துகின்றாள். பெண் பண்பாடுகளை மறுபரிசீலனை செய்கின்றாள். பதுமையாய் வாழ்வதை விடுத்துப் பெண் புதுமையினை விழைவதும் ஏற்பதும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

புதுமைப் பெண்ணின் அருங்குணமாக எளிமையேற்கும் பண்பு காணப்படுகிறது. ஆடை வெறியராகவோ, ஆபரணத் தாங்கியாகவோ, பெண் பொருள்கள் மோகியாகவோ பெண் விளங்கிவிடாமல் எளியதை ஏற்கும் வழக்கம் பெண்ணுக்கு உருவாதலே சிறப்பு எனச் சுட்டப்படுகிறது. பெண் தம் எளிமையால் மட்டுமே இச்சமூகத்தின் கண்ணோட்டத்தை மாற்றியமைக்க முடியும். பெண் வெறும் அலங்காரப் பொருள் அல்லள். அதுபோல் ஆண்களின் மனம் கவர்ந்த நுகர்வுப் பொருளும் அல்லள். தன்மானமும் சுய அறிவும் கொண்ட மனிதப்பிறவி ஆவாள். அவள் சூடிக்கொள்ளும் பொருள் ஒவ்வொன்றிலும் பல அறிவியல் உடல்சார் உண்மைகள் ஒளிந்திருப்பதாகக் கூறுவர். நாளமில்லாச் சுரப்பிகளின் தலையாயதாக விளங்கும் பிட்யூட்டரி சுரப்பியைத் தூண்டி நன்கு அதைச் செயல்பட வைப்பதாகப் பொட்டு வைத்துக் கொள்ளுதல் உள்ளது. வெள்ளிக் கொலுசுகள் இனவிருத்தி மற்றும் பாலியல் சார்ந்த உறுப்புகளின் செயல்பாடுகளை மேன்மைப்படுத்துகின்றன. அக்கொலுசுகளின் நாவுகள் முடக்கப்படுவதன் மூலமாகப் பெண்களைப் பேசும் திறனற்றவர்களாக மாற்றும் ஆணாதிக்கப் போக்கைச் சாடும் விதமாகக் கவிஞர் பார்வதி,

நாண்களை வரிசையாய்ப் பூட்டியது
போல்
நளினமாய்
அமைதியாயிருந்த கொலுசை விட
எனக்கென்னவோ
சத்தம் இறைக்கும் சாதாரண
கொலுசைத்தான் அதிகம் பிடிக்கிறது
(இது வேறு மழை, ப.9)

என்று புதுமைப் பெண்ணின் இயல்பை

வெளிப்படுத்துகிறார். காலுக்கு அணியும் கொலுசில் கூட ஆணாதிக்கத்தன்மை விளங்குவதைப் பெண் ஏற்பதில்லை. கொலுசுச் சத்தம் சமுதாயத்தினிடையே பெண்ணின் இருப்பை வெளிக்காட்டுகிறது. அவ்வொலி அவளுக்குத் தைரியத்தை ஊட்டுவதாகவும் அமைந்துள்ளது. இதன் விளைவாகப் பேசாமடந்தையும் பேசத் தொடங்கிவிடுவாள். அதன் மூலம் அடிமைத்தளைகள் ஒவ்வொன்றாக அற்றுப்போகும். இவற்றிற்கு அவள் காட்டும் எளிமை துணை செய்யும் எனலாம்.

திருமணம் ஆணுக்கும் பெண்ணுக்கும் தாம் வாழும் பூமியில் தான் நிச்சயிக்கப்படுகின்றன. சொர்க்கம் என்பது ஆண் உருவாக்கியப் பெண் புனைவு ஆகும். திருமணம் காரணமாக முதிர்கன்னி வாழ்க்கை, வரதட்சணைக் கொடுமை, பெண் கரு மற்றும் சிசுக்கொலைகள், விதவை வாழ்வு ஆகியன பெண்ணுக்கு ஏற்படுகின்றன. குடும்பம் உருவாவதற்கும் அக்குடும்பத்தில் பெண்ணிற்கு அநீதிகள் பல இழைக்கப்படுவதற்கும் திருமணம் முக்கியக் காரணியாக அமைந்துவிடுகிறது. ஆண். பெண் உறவு இதனால் கணவன், மனைவி உறவாகின்றது. கணவன் மனைவியை ஆளப்பிறந்தவனாக தன்னைக் கருதிக் கொள்கிறான். திருமணப் பேச்சில் மணப்பெண்ணின் விருப்பு. வெறுப்புகள் முக்கியத்துவம் பெறுவதில்லை. பொன்னோடும் பொருளோடும் விதியே என்று புகுந்த வீடு புக கழுத்தை நீட்டுவது மணப்பெண்ணின் மரபு சார்ந்த பணியாக உள்ளது. ஆனால், அண்மைக்காலங்களில் இந்நிலைமைகளில் ஓரளவு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. எனினும், வரதட்சணையின் அளவுகோல் முன்னைவிட இப்போது நீண்டு காணப்படுகிறது. இதன் காரணமாகப் பெண் மிகுந்த மண அச்சத்திற்கு உள்ளாகின்றாள். திருமணம் கண்டிப்பாகப் பெண் தின்று தீர வேண்டிய ஒரு கசப்புப் பொருளாக ஆகிவிட்டது. இத்தகு மண அச்சம் கட்டாயம் தவிர்க்கப்படுதல் வேண்டுமென்பது புதுமைப் பெண்ணின் முழக்கமாக உள்ளது. இதனைக் கவிஞர் கு. உமாதேவி,

வராந்தாவில்
காதுபடப் பேசுகிறார்கள்
திருமணங்குறித்த
சோதிடப் பொருத்தத்தை
உள்ளே மூஞ்சூறுகளோடு விளையாடிக்
கொண்டிருக்கிறேன்
தெள்ளுப்பூச்சியின்
பயமறியாமல் (திசைகளைப் பருகியவள், ப.37)

எனும் கவிதையில் மண அச்சவுணர்வைத் தகர்த்துப் பேசியுள்ளார். இவ் அச்ச உணர்வே பெண்ணை மனத்தளவில் முடமாக்கி இல்லறக் கொத்தடிமையாக வாழச் செய்து விடுகிறது. ஆண் ஆதிக்கம் செலுத்தவும் பெண் அடங்கி நடக்கவும் இஃது ஏதுவாகிறது. ஆணும் பெண்ணும் கருத்தொருமித்த பின்னர் மனமொருமித்து, அன்பையும் காதலையும் ஒருங்கே பங்கிட்டு. உயர்வு-

தாழ்வு கருதாமல் விட்டுக்கொடுத்து குடும்பம் மற்றும் சந்ததிகள் பெருக பெருவாழ்வு வாழ்வதையே இல்லற வாழ்க்கை என்கிறோம். அவ் இல்லறத்தைச் செம்மையாக நடத்துவதற்கும் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கும் பெண்களுக்கு அஞ்சாமைப் பண்பு அவசியமாகத் தேவைப்படுகிறது. புதுமைப்பெண்கள் திருமண பயம் தவிர்த்தவர்களாகக் காணப்படுகின்றனர். மண அச்சமின்மையே இல்லறத்தை நல்லறமாக்கும். அந்நல்லறம் நிலைத்துவிட்டால் பெண்ணடிமைத்தனம் ஒழிந்துபோகும்.

ஒவ்வொரு பெண்ணும் ஆணைப் போல இரத்தத்தாலும் அழுக்கு மற்றும் கழிவுகளாலும் நிரம்பியவள் என்பதை உணருதல் நல்லது. இவை பெண்ணின் இயல்புகளாகவும் உள்ளன. இவ்வியல்புகளை வெளிக்காட்ட புதுமைப்பெண்கள் தயங்குதல் கூடாது என்கின்றனர் பெண் கவிஞர்கள். ஏனெனில், ஆண் தம் இலக்கியங்களில் பெண்ணின் புற அழகை மட்டும் வியந்து, வருணித்து அவளை நல்லதொரு போகப் பொருளாக சமூகத்திற்குப் படைத்துத் தந்துள்ளான். அவனது படைப்புகளில் பெண்ணின் வெண் அல்லது சிவப்புத் தோலும், தசையின் திரட்சியும், வளைவும், நெளிவும் முக்கியப் பங்கு வகித்துள்ளன. இவை தவிர, பாதாதி கேசம் அல்லது கேசாதி பாதம் என அவளது அங்க அவயங்கள் நுகர்வுத் தன்மைகளுடன் மட்டுமே உவமிக்கப்பட்டும் விவரிக்கப்பட்டும் வருகின்றன. இத்தகைய செயல்களனைத்தும் பெண்ணைப் பெண்ணளவில் ஆணுக்கான அழகு உடைமைப் பொருள், அர்ப்பணிப்பு நுகர்வுப் பொருள் என்பதான சிந்தனைகளைத் தோற்றுவிக்கும் முயற்சிகளாகும். இப்பெண்ணடிமைச் சிந்தனைகளைப் புறம்தள்ளுவதும் பெண்களைப் புதுமைப்பெண்களாக உருவாக்கம் செய்வதும் பெண்கவிஞர்களின் சமூகப்பணிகளாக உள்ளன.

கழுத்து வரை நிணம்
இடுப்பு வரை மலம்
என்ன வேண்டியிருக்கிறது
இன்னும்
நாட்காட்டித் தாள்களாய்
சல்லாபம்
அம்பலம்
ரகசியம்
பின் (ஸ்நேகித வனம், ப.4)

என்னும் கவிதையில் கவிஞர் ரெங்கநாயகி, பெண்ணின் அகத்தில் நிரம்பியுள்ள புற இயல்புகளைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். இவை தாம் பெண்ணென்பதை இச்சமூகம் இதுநாள்வரை காண விரும்பாதவற்றை எடுத்துக்காட்டுவதுதான் பெண்ணியச் சிந்தனையின் முதல் வேலையாகும். அப்போதுதான் பெண் பற்றிய இரகசியங்கள், மோகங்கள். சல்லாபங்கள் மற்றும் கதையாடல்கள் இச்சமூகத்தில் இல்லாதொழியும். பெண் குறித்த பார்வைகள் மாற்றம் பெறும். பெண்ணின் இத்தகைய அம்பலத்தால்

ஆண்களிடையே விளங்கும் நுகர்வுத்தன்மை அடியோடு மாறிப்போக வாய்ப்பேற்படும். ஆண் பெண்ணை இணை உயிரியாக நினைந்து பாராட்டவும் மதித்து நடக்கவும் பெண்ணியல்பு வெளிப்பாடுகள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. எனவே, இவை புதுமைப் பெண்களின் இயல்புகளாக உள்ளன.

எல்லாம் பிடித்தும்
இறுதியாய்
முகம் பார்த்து
ஆனால் என்று
இழுக்கும் உறவுகள்
அப்பாவிடம்
சொல்ல வேண்டும்
பெண்
மாநிறமில்லை
நல்ல கருப்பு
என்று
சொல்லும்படி (எனக்கான காற்று, ப.65)

இக்கவிதையில் கவிஞர் ஏ. இராஜலட்சுமி, புதுமைப் பெண் என்பவள் தம்மைப் பற்றி எப்போதும் உயர்வாகக் கருதவில்லை என்றாலும் தாழ்வெண்ணம் கொள்ளாதிருத்தலே நன்று என்கிறார். தந்தையாதிக்கச் சமூகத்தின் முதல் சூழ்ச்சியே பெண்ணை உளப்பூர்வமாகத் தாழ்வெண்ணம் கொள்ளவைத்தது என்றால் மிகையில்லை. பெண் தாழ்வுணர்ச்சிக் காரணமாகத் தம்மை எளியவள் என்றும், பாவப்பிறப்பு என்றும், குறைபட்டு கொள்வதால் அவளுடைய தன்னம்பிக்கைச் சீர்குலைகிறது; வளர்ச்சித் தடைபடுகின்றது. தம்மால் எதுவும் செய்யவியலாது. தாம் ஒன்றுக்கும் உதவாதவள் போன்ற உ தவறான சிந்தனைகளுக்குப் பெண் தள்ளப்படுகின்றாள். அதிகாரம் மிக்க ஆணைச் சார்ந்து வாழப் பெண் தலைப்படுகின்றாள். இவ்வாறு தம்மை அண்டியப் பெண்ணை ஆண் நிரந்தர அடிமையாக்கிக் கொண்டுவிட்டான்.

நிறம் பெண்ணின் தாழ்வுணர்ச்சிக்கு மூலமாக உள்ளது. பெண் குடும்பங்களில், சமுதாயத் தளங்களில், பொதுவிடங்களில், வேலைவாய்ப்புகளில், திருமணம் முதலான நிகழ்வுகளில் இந்நிற அமைப்பால் பலவித அவமானங்களுக்கு ஆட்படுகின்றாள். உடலின் நிறம் என்பது மனித உடலியல் நிறமி சம்பந்தப்பட்டது. மேலும், இயற்கை வழிப்பட்டது. அதே சமயம், செயற்கைப் பூச்சுகள், வழிமுறைகள் ஆகியவற்றால் அதை மாற்றவியலுவது பெரும் மடமைத்தனமாகும்.

இதைப் பெண் உணர்ந்து சமூக வினையாற்றுவதே உகந்த செயலாகும் எனப் பெண்கவிஞர்கள் வலியுறுத்துகின்றனர். மேலும், பெண்ணின் எல்லாவிதத் துன்பங்களுக்கும் அடிப்படையாக விளங்குவது பெண்ணின் தாழ்வெண்ணம் ஆகும். இத்தாழ்வெண்ணத்தை ஒழித்தால்தான் பெண் தன்னம்பிக்கையும் துணிவும் பெற்று விளங்க முடியும்.

ஆணாதிக்கம் இச்சமூகத்தில்

மேன்மேலும் வலுவடைந்ததற்கு முழுமுதல் காரணம் பெண்ணின் அடிபணிதல் பண்பே ஆகும். அரசியலைப் போலவே குடும்பமும் வன்முறைகளின் நிலைக்களனாக உள்ளது. குடும்பத்தின் பிடி ஆணின் கைகளில் இருக்கின்றது. குடும்பத்தில் பக்தி பெண்ணுக்கு ஊட்டப்படுகிறது. பக்தி பணிவை வளர்க்கிறது. பணிதலினால் அடக்குமுறைகள் உருவாகின்றன. அடக்குமுறைகள் அனைத்தும் பெண்ணின் மீதே ஏவப்படுகின்றன. பெண் என்பதன் மறு உருவாக பணிதல் விளங்குகிறது. பெண்ணைக் காலந்தோறும் பணியச் செய்வதைக் கலை. இலக்கியங்கள் நோக்கங்களாகக் கொண்டுள்ளன.

பெண் எல்லாவற்றிற்கும் பணிய முற்பட்டதன் விளைவு சமூகத்தில் அவள் ஓர் இரண்டாம் தர உயிரியாக ஆக்கப்பட்டாள் எனலாம். 'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' என வள்ளுவம் எடுத்துரைத்தாலும், 'யார் யாரிடம் பணிவது' எனும் கேள்விக்கு விடையாக பெண் ஆணுக்கு உருவாக்கப்பட்டாள். இதனால், தம்மிலும் வயது மிகக்குறைவான சிறுவர்களின் ஏவல்களுக்குக் கூட கீழ்ப்படியும் அவலநிலை பதின்பருவ மங்கையருக்கு ஏற்பட்டுள்ளது. பூமியில் பாதத்தோடு பார்வையையும் பதித்து விளங்கும் பெண்ணைத் தலை நிமிரச் செய்வது என்பது புதுமைப்பெண் உருவாக்கத் தலையாயச் செய்கையாகும்.

இருக்கச் சொல்கிறீர்கள்
தோழியாக அன்னையாக
மகளாக மரபுள்ள மனைவியாக
இருக்கச் சொல்கிறீர்கள்
நாங்கள் பேய்கள்
கிறுக்கிகள்
இருப்பதில்லை சொன்னபடி (தணல் கொடிப் பூக்கள், ப.91)

என்பார் சதாரா மாலதி, பெண் தாம் நினைக்கும் எண்ணத்தை வெளியில் வெளிப்படையாகச் சொல்ல முடியாதபடி இவ் ஆணாதிக்கச் சமூகம் பெண் உள்ளத்தில் ஆட்சி செய்கின்றது. பெண் காலத்துக்கும் பணிய வைக்கப்படுவதை எதிர்க்கின்றனர் பெண்ணியவாதிகள். கவிதை என்பது பெண்ணின் மன மொழியாகக் காணப்படுகிறது. அதுபோல், பெண் மனத்தில் காணப்படும் பெண் மரபுப்படிமங்களைத் தூள் தூளாக்குவதற்கும் கவிதை தேவைப்படுகிறது. கவிதை பெண்ணைத் தைரியசாலி ஆக்குகிறது. தைரியம் நிரம்பப்பட்டப் பெண் ஆணுக்கு அணங்காக, பேயாக, கிறுக்கியாகக் காட்சி தந்து அச்சம் ஊட்டுகின்றாள். இத்தகைய அச்சுறுத்தல் வடிவங்கள் புதுமைப் பெண்ணின் தோற்றங்களாக உள்ளன. இஃது ஆண்களின் மேலாதிக்கங்களுக்குப் பெண்கள் காட்டும் பணிய மறுத்தலின் விளைவாகும்.

—

முனைவர். மணி கணேசன்
கைப்பேசி: 7010303298

# ஒவ்வொரு காற்றிலும்

கிசுகிசுத்தபடி இரகசியங்களை
பரிமாறிக் கொண்ட குடிசைகளின் மீது
செங்கற்கள் அடுக்கப்பட்டன
பாக்கு இடித்தபடி
வருவோர் போவோரை எல்லாம்
வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த
கிழவியை
சத்தமின்றி இடமாற்றம் செய்தன
கண்காணிப்பு கேமராக்கள்
கூட்டம் கூட்டமாக அமர்ந்து
கதை பேசிக்கொண்டிருந்த திண்ணைகள்
யாரையும் அனுமதிக்காத மதில்
சுவர்களாகின
கூப்பிடும் முன்பே வாபா
நல்லாயிருக்கயா என
ஓடிவரும் சொந்தங்கள்
காலிங் பெல் அடித்தும் எட்டிப் பார்க்க
மறுத்தன
இப்போதெல்லாம் காற்றுக்கு பதில்
புயல் வீசுகிறது ஆனாலும்
எந்த சலசலப்புமின்றி
மௌனம் காக்கின்றன மாடி வீடுகள் !!!

--------------------

தயிர் வாங்குறியோ தயிர் என
தயிர் விற்கும் அக்கா
எதிரில் வருவதைக் கண்டு
பின்னால் அமர்ந்திருந்தவர்
பரவாயில்லையே நல்ல சகுனம்
வண்டியை எடு என சொன்னதும்
எதிரில் யார் வருகிறார்கள் என
பார்த்து பார்த்து கிளம்புகிறவர்கள்
மத்தியில்
தெருவில் யாரேனும்
நல்ல காரியத்துக்கு புறப்படும்
போதெல்லாம்
பார்த்து பார்த்து ஒதுங்கிய
பாட்டியின் நியாபகம்
சுருக்கென்று குத்தியது !!!

—

கி. கவியரசன்

---

# 100 என்பது

பத்தாம் வகுப்புப் பரிட்சையில்
மகிழ்ச்சியின் முகவரி ...

100 என்பது
தோனி அடிக்கையில்
வெற்றியின் பெருமிதம்...

100 என்பது
இதிகாசத்தில்
பாண்டவர்சத்ரு...

100 என்பது வயதைக் குறிக்கையில்
வயோதிகத்தின் குறியீடு...

100 என்பது பாரிஸ் ஒலிம்பிக்கில்
வருதத்தின் முத்திரை...

*I STAND WITH VINESH PHOGAT*

— இனியவன் காளிதாஸ்

# வயநாடு நிலச்சரிவு - (தன்முனைக் கவிதைகள்)



கடவுளின் தேசம்
கரைகிறது கண்ணீரில்
மனிதருக்கு மனிதரேயெனும்
மகத்தான பாடம் சொல்லி

யார் சொன்னது?
கோபுரங்களும் சாயும்
கடவுளின் தேசத்தில்
கரையில்லா ஆறுகள்

விடத்தை விதைத்திட
அமுதமா விளையும் ?
பேராசைகளின் பரிசுகள்
பேரழிவுகள் மட்டுமே

மனிதமே மதம்
மன்னிப்பே வேதம்
கடவுளைக் குறை
கல்வியால் நிறை

வரும் முன்
காக்கா அறிவியல்
வந்த பின்னும்
தூங்கும் காவல் கற்கள்

கை கோர்க்கும்
சிறுபான்மை மக்கள்
கை கட்டி
பெரும்பான்மை மாக்கள்

ஓங்கி ஒலிக்கிறது
வனத்தின் குரல்
பலநாள் நசுக்கப்பட்ட
இயற்கையின் சீற்றம்

—

ராஜூ ஆரோக்கியசாமி,
மண்ணச்சநல்லூர்.

---

# என்ன சொல்கிறது?

நான் நாள் முழுவதும்
சுற்றி வருவது போல்
நீ இயங்கிக்கொண்டே இரு

இயக்கத்தின் போது
சத்தம் எழுப்புவது போல்
நீ யும் எண்ணத்துக்கு
குரல் கொடுத்து கொண்டே இரு

என்னை இயக்கும்
மின்கலன் செயலிழக்கும்
போது நான் தள்ளி
வைக்கப்படுவதைப்போல்
நீ யும் இயங்குவதை
நிறுத்தி விட்டால் உன் எதிர்காலமும்
கேள்விக்குறி தான்

நான் என்னுடைய
சின்ன முள்ளையும்
பெரிய முள்ளையும்
பணி செய்ய வைத்து
நேரக்கணக்கை காட்டுவது போல்
உன்னுடைய
மனதையும் புத்தியையும்
ஒருங்கிணைத்து
வாழ்க்கை பயணம் நடத்து

யாருக்காகவும்
என்னுடைய காலக்கணக்கு
காட்டுவதை நிறுத்துவதில்லை
அதைப்போல்
எந்த நிலையில்
கடமை செய்வதை  நிறுத்தாதே

என்னைப்போல்
குறுகிய வட்டத்தில்
சுற்றாமால்
சிந்தனையும்
செயலையும்
விரிவுபடுத்திக் கொண்டே இரு

உன் விழிப்புக்கு
என்னுடைய ஒலி அழைப்பானை
பயன்படுத்தாமால்
உன் கடமையை சொல்லி
மனது உடம்பை எழுப்பட்டும்

சொல்வது
கடிகாரம்

சொல்லப்படுவது
மனிதனிடத்தில்...

## ஆரோக்கிய தொற்றுகள்...

சிறிய உதவி கிடைத்தாலும்
உதட்டாலும், உள்ளத்தாலும் நன்றி

பரபரப்பான சூழ்நிலையிலும்
அமைதியான பேச்சு

பிறரிடம் பணி கொடுக்கும் போது முதல்
வார்த்தையாய்
தயவு செய்து

எதிர் மனிதர் பேசும் போது
குறுக்கிடாமால்
உள் வாங்குதல்

போன்ற குணங்கள் கொண்டோரிடம்
இணைந்தால்
அவை நம்மிடமும் தொற்றிக்கொண்டு
வாழ்க்கையை
செம்மையாக்கும்...

--

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.
*9994920236*



# நகரத்தில் மரணித்த மரணம்

நெருங்கிய உறவின்
மரணச் செய்தி
புலனக் குழுவில் கண்டதும்
தொற்றிக் கொண்டது பதற்றம்

அலுவலகத்தில் விடுமுறை
அனுமதி பெறவேண்டும்
பெண்ணை கல்லூரியிலிருந்து
'ஓலா'வில் வரச் சொல்ல வேண்டும்

தம்பிக்கு கூகுளில்
தற்போதைய இருப்பிடம்
தெரிவித்தாச்சு
தண்ணீர் தெளித்த
வாடிய மாலையை
அதிகவிலையென்று
தெரிந்தும் வாங்கியாச்சு
போக்குவரத்து நெரிசலில்
நசுங்கி பிதுங்கி எரிச்சலோடு
சாவு வீடு வந்து சேர்ந்தாச்சு
வாழ்வின் நிலையாமை
எண்ணி மனம் நொந்தாச்சு

உறவினர்களின் வருகையை
அறிவிக்கிறது
மெல்லிய விசும்பல்கள்
அழுகுரலாக மாறும் சத்தம்

'ஈ குடியிருப்புல யாரோ
செத்துத்துடாங்கன்னு நினைக்கிறேன்'
அடுக்ககத்தில்
பேசிக் கொண்டு செல்வது
காதில் விழுகிறது

'சாயந்திரம் ஐந்து மணிக்கெல்லாம்
பாடியை எடுத்திடணும்'
அடுக்கக செயலாளரின்
கட்டளைக் குரல்
இடியாக இறங்குகிறது

'இறந்தவங்களுக்கு
கடைசி காணிக்கை
மனசு நெறைய செய்யுங்க'
ஈமச்சடங்கு செய்பவனின்
கடைசி கட்ட பிண அறுவடை

நல்லா தான் இருந்தாங்க
திடீர்னு எப்படி செத்தாங்க?
சாவு வீட்டில் என்றும்
மரணிக்காத கேள்வி

இத்தனைக்கும் மத்தியில்
மூச்சுத்திணறலுள்ள அத்தை
குளிரூட்டப்பட்ட பெட்டியில்
சாவகாசமாக
படுத்துக் கிடக்கிறார்

அத்தையை நினைத்து
கணநேரம் கண்கலங்கி
கண் திறக்கையில்
வீட்டைக் கடந்து
வீதியில் சென்று
கொண்டிருக்கிறார்
சிறு வேனில்

—

பா. சிவகுமார்

# வானம் பருகும் குளம் - நூல் வாசிப்பனுபவம்


நூலின் பெயர்: வானம் பருகும் குளம்
நூலாசிரியர்: அகவலன்
வெளியீடு: நூலேணி பதிப்பகம்
நூலின் விலை: ரூ.110/-
நூல் வாங்க: 9094978511

ஒவ்வொருமுறையும் ஒரு புத்தகத்தை
கையில் எடுக்கும் போதும்
ஏதோ ஒன்றை புதிதாக
கற்றுக்கொள்கிறேன்
ஏதோ ஒரு புதுவித அனுபவத்தை
பெருகிறேன்
ஏதோ ஒரு புதியதை புத்தகம் எனக்கு
கற்பித்துவிடுகிறது
ஏதோ ஒரு புதிய ஞானத்தை அடைவதை
போல உணர்கிறேன்.

வானம் பருகும் குளம் கையில்
கிடைத்திருக்கிறது
கன்னிக்கோவில் ராஜா ஐயா அவர்களின்
அணிந்துரையோடு புத்தகம்
தொடங்குகிறது...

கரையில் தூண்டில்காரன்
நிச்சயமாக மீன் கிடைக்கும்
காத்திருக்கும் கொக்கு...

எவ்வளவு ஒரு நுனுக்கமான கவிதை
மீன் நிச்சயம் கிடைக்கும்
தூண்டில்காரனுக்கா அல்லது
கொக்குகக்கா...




காலம்
விடையளிக்கும்
காத்திருப்போம் ..

பலூன் வாங்க
போன குழந்தை
திரும்பி விட்டது
பட்டாம்பூச்சி ..

பலூன் வாஙக செல்லும் குழந்தையை
வழிமறித்து
திரும்பும் பட்டாம்பூச்சி ஆகா எத்தனை
அழகு...

புது வீடு கட்டியதும்
திரும்ப வரவில்லை
பழைய காக்கை குருவிகள் ..

பாவம் எங்கு சென்றதோ அந்த. காக்கை
குருவிகள் ஏக்கத்தோடு தேடுகிறார்
கவிஞர் ..

அடுக்கு மாடி குடியிருப்பில்
மலர் தோட்டம்
மின்தூக்கி வழியாக வண்ணத்துப்பூச்சி ...

ஆகா சில சமயம் நாமும் இதை
கவனித்திருப்போம் மின்தூக்கி வழியாக
பட்டாம்பூச்சிகள் அடுக்கு மாடி
குடியிருப்புகளை சுற்றி சுற்றி வருவதை...

வீசிய வலை
துடிதுடிக்கிறது மீன்
மௌனமாகவே கடல்...

அழ்கடலின் மௌனத்தை அலைகள்
வந்து சொல்லும் கரைக்கு ..
அதுபோல தான் கவிஞரின் கவிதைகளும்
கவிஞரின் மனதிலுள்ளதை கவிதைகள்
சொல்கின்றன ..
கவிஞருக்கு வாழ்த்துகள் ..

—

நூல் விமர்சகர்:
கவிஞர் ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.
8867933021

---

# நிலச்சரிவு

மரங்களை வேரோடு
பிடுங்கி விட்டு
மனிதர்களை புதைத்து விட்டுச்
செல்கிறது நிலச்சரிவு

கன மழையில்
கரைந்தது மலைகள்
சரிந்தது கட்டிய கனவுகள்
கோரப்பிடியில் மக்கள்

ஆர்ப்பரிக்கும் வெள்ளம்
ஓலமிட்டு அழுகிறது
அமைதியாய் கரை சேர்கின்றன
மனித உடல்கள்

அடையாளம் காண வைக்கப்பட்ட
பிணவறையில்
அடையாளம் தெரியாமலே
கிடைக்கின்றன
மனித உறுப்புகள்

வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டது
சாலைகள் மட்டுமல்ல
அப்பாவி மக்களின்
வாழ்க்கையும்

புதைந்த இடத்தில்
கடைசி உறக்கம்
காவலுக்கு நிற்கின்றன
உருண்ட பாறைகள்

நிலச்சரிவில்
தப்பிய உயிர்கள்
தேடிக் கொண்டேயிருக்கின்றன
தங்கள் இதயங்களை

மண் தின்றுப்போட்ட மிச்சத்தில்
மீதம் இருக்கிறது நம்பிக்கை
புதைந்த இதயங்களை
மீட்டெடுக்கிறது மனிதம்

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
கைப்பேசி: 6380704001



# நட்சத்திரங்களில்லாத இரவுகளை பிடிப்பதில்லை...

எண்ணி முடிப்பதென்பது
இயலாதெனத் தெரிந்தும்
எண்ணுவதைத் தொடரும்
மனதிற்கு,
முதன் முதலில் ஒன்று
இரண்டு கற்றுக்கொண்டதும்,
மேகத்திற்குள் மறைந்த
போது காத்திருக்க
கற்றுக்கொண்டதும்
நட்சத்திரங்களிடம் தான்,
கார்காலம் முழுவதும்
காண முடியாதென
தெரிந்தும் வானத்தைப்பார்த்து
ஆளாய் பறந்ததும்
இம்மனம் தான்,
நட்சத்திரங்களுக்கு
ஒவ்வொரு உறவுகளின்
பெயர்களை வைத்து
மகிழ்ந்துகொள்கிறேன்...
நான் இல்லாத போது
நீங்கள் ஒரு நட்சத்திரங்களுக்கு
பெயர்வைத்து
அழைப்பீர்களென நம்பி,
இப்போது
இக்கவிதையை முடிக்கிறேன்!

—

மு. முபாரக்,
திருச்சி.



# இயற்கையின் கோபம்...!

வயநாடு..!
எங்கும் பசுமை..
எங்கும் நீரோடை...
எங்கும் மரங்கள்...
அழகிய நீர் வீழ்ச்சிகள்..
அரனாய் மலைகள்..
இயற்கையின் சமநிலை...
இயல்பாய் வயநாடு...
இன்று -
மரங்கள் வெட்டப்பட்டு...
காடுகள் அழிக்கப்பட்டு...
மலைகள் உடைக்கப்பட்டு..
அருவிகள் அழிக்கப்பட்டு
கட்டிடங்கள் முளைத்து...
வியாபாரம் வேரூன்றியது...!
விளைவு -
இயற்கையின் கோபம் ..!
மலைகள் உருண்டன...
நீர்வீழ்ச்சி சீறியது..
புதையுண்டனர் மக்கள்..!
இயற்கையை சீரழித்தவர்கள்
பாதுகாப்பாய்...!
அப்பாவி மக்கள் பலிகடாவாய்...!?

— முனைவர் சா. சம்பத்
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



# புதிய பூக்கள்

எத்தனை நாள் காத்திருந்தேன்
ஏக்கத்தோடு விழித்திருந்தேன்
வான்மேகம் கருமை சூடமறுத்தது
மரஇலைகள் பசிமை பூச மறந்தது

வண்டினங்கள் பூக்களின்றி
வட்மிட்டு தோற்றது
வான்மேகம் வெம்மை தந்தது
வேடிக்கைப் பார்த்தது

குயிலினங்கள் குரல் தழுத்து
கூவி கூவி சோர்ந்தது
குதூகலிக்கும் தென்றல் கூட
குளிர்ச்சியைத் தொலைத்தது

கோடைக்கால ஊளைக்காற்று
கொக்கரித்து குளித்தது
கொட்டும் சுடரை மெல்லமெல்ல
குவித்து வெப்ப நிழலானது

வான்கூவும் வண்டினங்கள்
வண்குழலில் ஒளிந்தது
இலை உதிர்த்த மரக்கிளைகள்
இரக்கம் இழந்து தவித்தது

ஒப்பார் இன்றி தெருக்கள்கூட
ஒப்பனை தவிர்த்து நின்றது
வறண்ட வாயின் தடாகங்கள்
வலிந்து நீரைக் குடித்தது.

கண்களைக் கசக்கி கூசச் செய்யும்
கதிரவன் கருணைமறந்து ஓடுகிறது
நீரில் நனையா ஆடை கூட
நீண்ட வெண்மை சூடியது

இத்தனை வேதனை உளமேற்றாலும்
இனித்தது புதிய பூக்களுமே
இன்நொடி உலகம் அழகினிலே
இசை மழை தந்தது களிப்பினிலே.

—

ஹேமா லதா

# தேநீர்

லேசாகி விட்டது
மனசு
இது...
உன்னோடான
தேநீர் பொழுதுகள்

*****

மிகையாய் ஏதுமில்லை
ஒத்த ரூபாய் சாக்லேட்டில்
மனம் நிறைந்து விடுகிறது -குழந்தை

கொஞ்சம் சமாதானத்தோடு
நிறைய ஆற்றாமைகளையும்
சேர்த்தே தருகின்றன
கவரிங் நகைகள்
என்ன செய்வது?
இல்லாமைகளை எல்லாம்
இருப்பதாய் ஒப்பேற்றியே
வாழும் நடுத்தர வர்க்கம்
நாங்கள்

—

பி. ஹேமா,
முசிறி.

# குலதெய்வம் சிறுகதை

## (உண்மையை அடிப்படையாய் கொண்ட புனைவு சிறுகதை)



வாழ்க்கை என்னும் புத்தகம் புதிய புதிய மனிதர்களை பாத்திரங்களாய் அறிமுகம் செய்திகொண்டே போகிறது.நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரும் ஒரு அனுபவத்தை அளித்து செல்கிறார்கள். அவ்வாறு நான் சந்தித்த ஒருவரை பின்புலமாக கொண்டு புனையப்பட்ட சிறுகதை. வாழ்க்கையில் எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாற்றம் ஒன்றையே பரிசை பெற்றாலும் விடாது தனித்து போராடுவதில் பெண்கள் எப்போதுமே போராளிகள் தான். அப்படி நான் சந்தித்த ஒரு பெண்மணியை பற்றிய கதை தான் இது. கோமாளியாய், கேலி சித்திரமாய் தன்னை வெளிக்காட்டிக்கொண்டாலும் பெற்ற பிள்ளைகளை தன்னந்தனியாய் கரைசேர்த்த ஒற்றை ஒடம் தான் இந்த பெண்மணி. பெரும்பாலும் உண்மையை கொண்டு பின்னப்பட்டது.

"இராணி நல்ல இருக்கியா. மாடு புடிச்சி கட்டிக்கிட்டு இருந்தேன் கொல்லைப் பக்கத்துலே. இப்போ தான் போன் சத்தம் கேட்டு ஓடியாரேன் புள்ளைங்க எல்லாம் என்ன பண்ணுது .சாப்பிடீங்களா" வாஞ்சையாய் அன்புடன் கேட்டாள் அம்மா. ஆம் கனவிலும் நினைத்து பார்க்காத நிலைமை உலகத்துக்கே. கொரோனா எனும் கொடிய தோற்று மனித இனத்தையே தனிமைப்படுத்தி வீட்டுக்குள் சிறைவைத்துவிட்டது. இப்போது ஐந்தடி தொலைவில் இருப்பவரும் சரி ஐயாயிரம் மைல் தொலைவில் இருப்பவரும் சரி ஒன்று தான். தொலைபேசி, கைபேசி, கணினி போன்றவைதான் ஒட்ட வைத்துக்கொண்டிருந்தது மனித இனத்தை.

இப்படி தனிமை சிறைக்குள் இருப்பதால் தான் நேற்று காலை பேசிய அம்மா இன்று வெகுநாள் பேசாதவள் போல விசாரிக்கிறாள். இராணி வழக்கம் போல அப்பா, தம்பி எல்லோரையும் விசாரித்தவள், சட்டென்று நினைவு வந்தவள் போல "தங்கம் அத்தையே பார்த்தியா நல்லா இருக்காங்களா" என்றாள். அம்மாவாக யாரை பற்றியும் சொல்லமாட்டாள். இராணியாக துருவி துருவி கேட்டால் தான் பதில் சொல்லுவாள். சில நேரம் இராணிக்கு, வேறு யார் மூலமாக சில விடயங்கள் தெரியும்போது அம்மாவிடம் கோவித்து கொள்வாள். தினமும் பேசுகிறேன் ஏன் இப்பிடி உறவுகளுக்கு நடக்கும் நல்லது கெட்டது என்று எதுவுமே சொல்லமறுக்கிறாய் என.

அதற்கு அம்மா" நாங்க இங்க ஊரோட, உறவோடு இருக்குறோம். எங்களுக்கு என்ன. ஏதாச்சும்னா பாத்துக்க அக்கம் பக்கத்துலே இருக்காங்க. நீ தான் கடல் தாண்டி தூர தேசத்துலே தனியா கெடக்குறே. எதுக்கு உன்கிட்டே இதையெல்லாம் சொல்லி நீ அதையே நினைச்சுகிட்டு கெடப்பே அதான் சொல்லுறது இல்லே" என்பாள். அம்மாவின் அன்புக்கு

ஈடு இந்த உலகில் உண்டா என்ன. தங்கம் அத்தையை பற்றி கேட்டதும் அம்மா குரலில் உற்சாகம் வந்தது. "குழந்தையை பாக்க உன் மாமியாரோட அன்னிக்கு வீட்டுக்கு வந்துச்சே.அரை மணி நேரங்கூட உட்காரலே. பேரன் அழுவான்னு கால்லே வெந்நீரை ஊத்துன மாதிரி அவசரப்படுத்தி போயிட்டு" என்றாள்.

அதை கேட்டதும் இராணிக்கு வியப்பு கலந்த குரலில் "பேரனா, அமுதாக்கு பையன் பொறந்திருக்கா" என்று கேட்டாள்.

"ஆமாம் ஆறு மாசமாகுது. சின்னவ வனிதாவும் முழுகாமே இருக்காளாம். வளைகாப்பு செய்யணும்னு சொன்னுச்சு. எல்லாம் நல்லபடியா இருக்காங்க " என்றாள் மேலும் அம்மா. இராணிக்கு மனிதில் நெடுநாளாக இருந்த ஒரு இருட்டு நெருடல் முடிச்சு அவிழ்ந்து வெளிச்ச சந்தோச கீற்று பாய்ந்தது போலிருந்தது. அம்மாவிடம் பேசிவிட்டு தொலைபேசியை வைத்துவிட்டு சமையலை ஆரம்பித்த இராணிக்கு தங்கம் அத்தையை பற்றிய நினைவு வந்து எண்ண அலைகள் அவளை ஏழு வருடங்களுக்கு முன் இழுத்து சென்றது.

இதமான இளம் காலை பொழுது. மகளுக்கு தடுப்புஊசி போட அருகிலுள்ள நகரத்துக்கு அப்பாவுடன் போய் கொண்டிருந்தாள் இராணி. முகத்தில் அறையும் காற்றினால் அலையும் முடிக்கற்றையை ஒதுக்கியபடி டிவிஎஸ் 50 பின்புறம் அமர்ந்திருந்த இராணி சாலையின் இருபுறமும் விரையும் பச்சை வயல்களை ரசித்தபடி பயணித்தாள். மூன்றரை வயது அழகு மகள் வண்டியின் முன்புறம் கம்பீரமாக நின்று கொண்டு மகிழ்ச்சியோடு வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள். இராணியின் மகள் கிராமத்தில் தனியாய் இருக்கும் தன் மாமியாருடன் தான் வளர்ந்தாள் வெளிநாட்டில் இருக்கும் இராணியின் கணவனின் கட்டளைப்படி.

சிறிது காலத்திற்கு தான் என்பதாலும், கணவன் சொன்னால் எதையும் செய்யும் இராணி தன் கணவனின் ஆசைக்காகவும், கிராமத்தின் அழகான சூழ்நிலையில் மகள் வளரட்டும் எனவும், மேலும் அடுத்த தெருவில் வசிக்கும் தன் தாய், தந்தையும் மகளை பார்த்துக் கொள்ளுவார்கள் எனவும், சொந்த பந்தத்தோடு சுத்தமான மாட்டுப்பால் குடித்து ஆரோக்கியமாக வளரட்டும் எனவும் தன் தாய்மை உணர்வை கூட கட்டுப்படுத்திக்கொண்டு தானும் மகளும் கணவனோடு சேரும் நாட்களுக்கான காத்திருப்போடு ஒரு தவ வாழ்க்கையை தனியாக வாழ்ந்தாள் இராணி. தொழில் நுட்ப வல்லுனராக பணி புரியும் அவள் வார இறுதியானால் கிராமத்துக்கு மகளை பார்க்க சிட்டாய் பறந்து விடுவாள். அவ்வாறு ஒருமுறை வந்தபோது மகளோடும் அப்பாவோடும் அன்று அருகிலுள்ள நகரத்துக்கு சென்று கொண்டிருந்தாள் இராணி. வண்டியை அப்பா சீரான வேகத்தில் ஓட்டி கொண்டிருந்தார்.

அந்த சாலை முழுவதும் பெரும்பாலும் வெள்ளை வண்ணத்தில் எண்கள் போடப்பட்ட புளியமரங்கள் சாலையின் இருமருங்கிலும் நின்று, சற்று உயரத்துக்கு மேல் கைகுலுக்கி இயற்கை கூடாரம் அமைத்து சாலையில் வெயில் படாமல் செய்யும் மகத்தான பணியில் மனிதனுக்கு மனிதநேயம் சொல்லி கொடுத்து கொண்டிருந்தன.

பச்சையின் மீது அவளுக்கிருந்த தீராக்காதல் அவள் மட்டுமே அறிந்தது. பசுமை அவளுக்கான பிடித்தமான வண்ணம் மட்டுமல்ல, வளமான வாழ்வின் ஆதாரம் என்பது அவளின் அசைக்கமுடியாத நம்பிக்கை. கிராமத்தின் செழிப்பு, பணக்காரத்தன்மை என்பது எல்லாமே வயல்வெளியின் இந்த பச்சை கம்பளமே. உலகுக்கே சோறு போடும் உழவனின் உள்ளத்தின் வண்ணம் என எண்ணுவாள் இராணி. தனது இலட்சியமும் இந்த பச்சை வண்ணத்திலேயே தோய்ந்திருப்பதாகவே நினைத்து கொள்வாள்.

பச்சை வெளி அவளுக்கு எப்போதுமே ஐயாவின் நினைப்பை கொண்டு வரும். அவர் காலத்தில் வாழ்ந்தும் அவரை ஒருமுறை கூட சந்திக்காமல் போனோமே என்ற ஏக்கம் எப்போதுமே அவளுக்கு உண்டு. ஆனால் அவருடைய எழுத்துகள், கருத்துகள் அவரை இன்னும் உயிரோடு பல்கி பெறுக வைத்துக்கொண்டே இருக்கும் அவருடைய வழித்தோன்றல் வழியாய் பல தலைமுறைகளாய். அந்த அவர் வேறு யாருமல்ல உரமேனும் புதைகுழிக்குள் விழுந்து தற்கொலை செய்துகொண்டிருந்த உழவர்களை மீட்டுஎடுத்த இயற்கை தெய்வம் ஐயா நம்மாழ்வார் தான்.

இவ்வாறு சாலையோரத்திலே இருந்த வயல் வெளிகளிலே ஐயாவின் நினைவிலே தன்னை ஒப்பு கொடுத்து விட்டிருந்த இராணியின் கவனம் முன்னால் மிதி வண்டியில் சென்றி கொண்டிருந்த பெண்மணியை கண்டதும் நிகழ் காலத்துக்கு வந்தது. அருகில் சென்றதும் அவர் தங்கம் அத்தை என்பது தெரிந்தது.

இராணியை பார்த்ததும் உற்சாக புன்னகையுடன் "பள்ளிக்கு போறேன் பா" என தலையாட்டினார் தங்கம் அத்தை. இராணியின் தெருவிலேயே வசிக்கும் தங்கம் அத்தையின் இயற்பெயர் அவருக்கு மட்டுமே தெரியும். எந்த உறவு முறையாய் இருந்தாலும், எந்த வயதினராய் இருந்தாலும் எல்லாரும் அவரை அழைப்பது "தங்கம் அத்தை " என்று தான். அது அவரே அவருக்கு சூட்டிக்கொண்ட பெயர்.

பெயர்க்காரணம் என்னவென்றால் தனது கருப்பு நிற அழகு தங்கத்தை போல பளபளவென்று இருப்பதாகவும் வெறுமே தன்னை அத்தை என்று அழைக்காமல் தங்கம் போன்ற தன்னை தங்கம் அத்தை என அழைக்குமாறு தெருவில் உள்ள சிறுவர்களை கேட்டு கொள்ள, முதலில் சிறுவர்களால் அழைக்கப்பட்டு பின்பு பெரியவர்களும் அழைக்க தொடங்கி பிறகு அதுவே அவரது பெயராயிற்று. தங்கம் அத்தை அவர்கள் கிராமத்திலிருந்து மூன்று காத தூரத்திலுள்ள சின்னஞ்சிறு கிராமத்திலுள்ள ஒரு தொடக்க பள்ளியில் சத்துணவு

ஆசிரியராக இருக்கிறார். சத்துணவு பொருள்களின் கணக்கு வழக்குகளை கவனிப்பது அவரது வேலை. தங்கம் அத்தையின் கணவர் குடிகாரர். எல்லா வேலைகளுக்கும் செல்வார். சம்பளம் சாராயக்கடைக்கு தான் செல்லும். ஒருபோதும் வீடு வந்து சேராது.
தங்கம் அத்தைக்கு இரு பெண் பிள்ளைகள் பெரியவள் அமுதா இளையவள் வனிதா.

இருவருக்கும் படிப்பில் பெரிதாக ஆர்வம் இல்லை. தங்கம் அத்தையும் படிக்க வைப்பதில் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. பாவம் கல்வி தான் பெண்ணுக்கு பெரிய பாதுகாப்பு மற்றும் தற்காப்பு என எடுத்து சொல்லி அவர்களுக்கு புரியவைக்க அவர்கள் வாழ்ந்த சூழ்நிலை இடம்கொடவில்லை என்பது தான் நிதர்சனம். அதே கிராமத்தில் படித்து நகரத்தில் பணி புரியும் இராணி பல முறை எடுத்து சொல்லியும் அவர்களுக்கு புரியவில்லை. படிப்புக்கு தான் நிதிஉதவி செய்வதாகவும் உறுதி கொடுத்தாள் இராணி. தன் முயற்சிகள் பலிக்காமல் போகவே அவர்களை பார்க்கும் போதெல்லாம் வேதனை படுவாள் இராணி.

தங்கம் அத்தையின் இளைய மகள் வனிதாவுக்கு இராணியின் மூன்றரை வயது அழகு மகளை கண்டால் கொள்ளை பிரியம். அன்றாடம் நடக்கும் சண்டை சச்சரவுகளாலும், இராணியின் மாமியார் குழந்தையோடு தனியாக இருப்பதாலும் வனிதாவுக்கு இராணி வீட்டில் தான் அவளுக்கு இரவு உறக்கம். இராணியின் அம்மாவும் பேசும்போதெல்லாம் வனிதாவின் குழந்தை மீதான கொள்ள பாசத்தையும் அவள் குழந்தையை பார்த்துக்கொள்ளும் பொறுப்பையும் இராணியிடம் சொல்லி அவளுக்கு முடியும் போதெல்லாம் ஆடைகள் வாங்கி வரச்சொல்லி நன்றியை காட்டிக்கொள்ள செய்வாள்.

பிழையில்லால் தமிழ் எழுதுவது கூட பெருமாள் புண்ணியம் தங்கம் அத்தைக்கு கணக்குக்கு சொல்லவும் வேண்டுமா என்ன. கட்சியில் செல்வாக்காக இருந்த தங்கம் அத்தையின் தாய் மாமன் தான் இரக்கப்பட்டு அவருக்கு அந்த வேலையை சிபாரிசில் வாங்கி தந்தாக இராணியின் மாமியார் சொல்ல கேட்டிருக்கிறாள்.

தங்கம் அத்தை குணம் வித்தியாசமானது. அவரை சந்தித்த ஆரம்ப நாட்களில் அவருடைய பேச்சு பெரும் வியப்பை தந்தது இராணிக்கு. யார் என்ன நினைப்பார்கள் என்ன சொல்லுவார்கள் என எதற்குமே அவருக்கு கவலை இருப்பதாக தெரியாது. மனதில் நினைத்ததை படபடவென்று பேசிக்கொண்டே இருப்பார். ஊர்வம்பில் ஆர்வம் கொண்ட இராணியின் 'மாமியார் சபை'யில் தங்கம் அத்தைக்கு செய்தி மற்றும் தகவல் சொல்லும் துறையில் இலாகா ஒதுக்கப்பட்டிருந்தது.

எல்லாவற்றையும் வெளிக்கொட்டும் தங்கம் அத்தையின் மூலமாகத்தான் தெருவில் மட்டுமல்ல, கிராமத்தில் நடக்கும் மொத்த நிகழ்வுகளையும் வாங்கி, அரைகுறையாக விளங்கி , வம்பு மாநாடு போடுவதில் இராணியின் மாமியாருக்கு நிகராக இனி ஒருவர்

பிறந்து வந்தால் தான் உண்டு. பெரும்பாலும் விடுமுறைக்கு மட்டுமே வந்து ஓரிரு நாட்கள் தங்கி போகும் இராணி இதிலெல்லாம் கலந்து கொள்ள மாட்டாள். அடுத்தவர் பற்றி வம்பு மாநாடு தொடங்கினால் அந்த இடத்தை காலி செய்து விடுவாள் இராணி.

மிகவும் செல்லமாக வளர்ந்ததாகவும் , பள்ளியில் படிக்கும் போது காதல் வயப்பட்டு அடம்பிடித்து தான் தன் கணவரை கைபிடித்து சீரழிந்ததாகவும் தங்கம் அத்தை சொல்லுவார். சொல்லுமளவுக்கு இருந்த சொத்தை எல்லாம் வேலைக்கு போகாமல் குடித்தே விற்று தீர்த்து விட்டதாகவும் குடி இருக்கும் இந்த இடம் மட்டும் தன் மிச்சம் என்பார். இராணியின் குலதெய்வ கோயிலுக்கு பக்கத்திலே இருந்தது அவருடைய கூரை வேயப்பட்ட வீடு. பெண் பிள்ளைகள் பெரிதாகிவிட்டார்கள் என கடன் வாங்கி சமாளித்து கழிப்பறை கட்டிவிட்டார் எப்படியோ. நாளொரு வாக்குவாதமும் பொழுதொரு சண்டையுமாய் தங்கம் அத்தையின் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது.

அவசரத்துக்கு பொருட்களை கொடுத்ததும், பணத்தை கடனாக கொடுத்ததும் தங்கம் அத்தையின் பொன்னான செய்தி சேகரிக்கும் உறவை தக்க வைத்து கொண்டிருந்தார் இராணியின் மாமியார். தங்கம் அத்தையிடம் "உன் கணவர் தான் மோசம். நீ பாவம், இரு பெண் பிள்ளைகளை வைத்து கொண்டு என்ன செய்வாய்" என போலி பாசாங்கு பண்ணுவார். தங்கம் அத்தையின் கணவரிடம் "பொண்டாட்டி சரியில்லை. பாவம் நீ ஆண்பிள்ளை குடிக்காமல் என்ன செய்வாய்" என தூண்டி விடுவார்.

நல்ல ஆடைகள் உடுத்துவதிலும், தன்னை அழகு படுத்தி கொள்வதிலும், பூக்களின் மீதும் தனி விருப்பம் உண்டு தங்கம் அத்தைக்கு. தினமும் செல்ல வேண்டுமென்றாலும் வாரத்திற்கு மூன்று நாட்கள் பள்ளிக்கு செல்வதே பெரும்பாடு தங்கம் அத்தைக்கு. மகள்களும் அப்படியே. மிதிவண்டியில் தான் வேலைக்கு சொல்லுவார். அப்படியே கிளம்பினாலும் தெருவில் வெளியில் நிற்கும் ஒவ்வொருவருடனும் நின்று பேசி "சேலை நல்ல இருக்கா. தோடு நல்ல இருக்கா. பூ பார்த்தியா" எனக்கேட்டு அவர்கள் கேலியாக சொல்லும் பதிலை பெற்று மனநிறைவோடு மிதிவண்டியை கிளம்புவார்.

இராணியை பார்த்தால் போதும் உடனே நின்று "எல்லாரையும் விடுப்பா நீ சொல்லு சீலை நல்லா இருக்கா உனக்கு தான் தெரியும் சரியாய் சொல்லுவே படிச்ச பிள்ளே வேலை பாக்குறே நீ சொல்லு " என்பார். இராணியின் மாமியார் கேலிப்பேச்சுகளை காதில் வாங்கி "நீ போ அண்ணி உனக்கு ஒன்னும் தெரியாது என்ன இருந்தாலும் நா ஒரு அரசு ஊழியர்" என்று கம்பீரமாய் சொல்லி கொள்வார். பெரிய பெண் இரு முறை பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் தோல்வியுற்றதால் படிப்பை நிறுத்தி வீட்டு வேலைகளை கவனிக்க செய்துவிட்டார். சின்ன மகள் அம்மாவை போல வாரத்தில் ஓரிரு நாட்கள் பள்ளியை எட்டி பார்ப்பாள்.

தங்கம் அத்தையின் இயல்பு அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றம், வெறுப்பு , துன்பம் எல்லாவற்றாலும் இப்படி மாறி இருக்கலாம். தங்கம் அத்தையை போல ஆழ்மனதில் வலி கொண்டவர்கள் வெளியில் பகடியாக பேசுவதும் அல்லது துன்பமில்லாதவர் போல காட்டிக்கொள்வதும், கோமாளிகளாக வேடமிடுவதும் அல்லது எதைப்பற்றியும் கவலை படாதவராய் தங்களை ஆக்கிக்கொள்வதும், தங்களை தாங்களே ஆழ்மனதின் வலியிலிருந்து விளக்கிக்கொள்வதே ஆகும்.

தங்கம் அத்தையும் அப்படித்தான் அவர் மீள் வழியை ஏற்படுத்தி கொண்டிருக்கவேண்டும். அவர்களின் இந்த மாற்றம் ஏதோ ஒருவகையில் பாதுகாப்பாக அல்லது சிறிது துன்பத்தை குறைக்கலாம். சீதையோ, கண்ணகியோ இன்று வந்தாலும் சிறிது சிரித்து பேசிவிட்டால் அவள் கற்பென்னும் கற்பனையை விலை பேசிவிட்டாள் என முடிவு எழுதிவிடும் வெள்ளந்தி கிராமத்தில் பிறந்த தங்கம் அத்தை மட்டும் என்ன தான் செய்வாள் பாவம்.

ஏதோ அவள் வருமானத்திலும், சத்துணவு கூடத்தில் கிடைக்கும் அரிசி, பருப்பு மற்றும் முட்டைகளாலும், சத்தமாக பேசி சிரித்து பூ, புடவை என சின்ன விடயங்களிலும் மற்றவர்கள் கொடுக்கும் கோமாளி பட்டத்தை உதறிவிட்டு செல்லும் பாங்கிலும் அவள் வாழ்க்கை சக்கரத்தை முடிந்தவரை சுலமாக்கி கொண்டு ஓட்டிக்கொண்டிருந்தாள் தங்கம் அத்தை.

இந்தமுறை இராணி ஊருக்கு வந்திருந்தபோது வாரத்திற்கு இரு முறை நடந்து கொண்டிருந்த தங்கம் அத்தைக்கும் அவரது அருமை கணவருக்குமான சண்டை இப்போது ஒரு நாளைக்கு இரு முறையாக குறுகி பெரிதாக தொடர்வதாக மாமியார் மூலம் தெரிந்துகொண்டு உள்ளுக்குள் வேதனை பட்டாள். ஒருவரை ஒருவர் கொன்று விடும் வேகத்தோடு சண்டையிட்டு கொல்லுவதாகவும் இது எங்கு போய் முடியப்போகிறதோ எனவும் உள்ளுக்குள் இருந்த ஆர்வம் வார்த்தைகளில் வெளிப்பட மாமியார் சொன்னது சிறிது திகிலை கிளப்பியது இராணிக்கு.

தங்கம் அத்தையை பார்த்தவுடன் நினைவுக்கு வந்த அனைத்தையும் நினைத்து கொண்டு இராணியும் பதிலுக்கு புன்னகைத்து கையாட்டி கடந்து சென்றாள்.

அம்மாவின் கட்டாயத்துக்கு கட்டிய புடவை டிவிஎஸ் பயணத்திற்கு இலகுவாக இல்லை.ஒரே பக்கமாக காலை தொங்கபோட்டதால் கால் வலிக்க தொடங்கியதால் ராணி அப்பாவை வண்டியை நிறுத்த சொன்னாள். அப்பா நிறுத்தவே கீழே இறங்கி தன்னை ஆசுவாசப்படுத்தி கொண்டவள் தங்கம் அத்தை தன்னை கடந்து முன்னே சென்றி விட்டதை கவனித்தாள். தங்கம் அத்தை பற்றிய யோசனையில் ஆழ்ந்து இருந்தாலும் சாலையோர பெருத்த, வயதே தெரியா இருமருங்கு புளியமரங்களை கண்களால் எண்ணங்களின் மூலம் தொட்ட இராணியின் புத்தியில் புளியமரத்தின் மறைவிலிருந்து கையில் அரிவாளோடு

வெளிப்பட்ட அந்த மனிதனும் பதிய
அடுத்த நிமிடம் நடந்தது இன்று வரை
எப்படி என்று நினைவில் இல்லை.

அடுத்த இதழில் தொடரும்...

—

இளவரசி இளங்கோவன்,
பரவாக்கோட்டை.

---

# வாழ்வியல் உண்மைகள்

சிலரை; பிரிதலால் புரியவைத்தும்,
சிலரை; புரிதலால் பிரியவைத்தும்,
மனிதனின் வாழ்வை செம்மையாக
நகர்த்துகிறது; காலம்!

மறந்தவர்களை விடவும், நம்மை
மறுத்தவர்கள் தான்; நமது
முன்னேற்றத்திற்கான பாடமே!

தவறி விழும் கண்ணாடிப் பொருளில்,
சிதறிக் கலைகிறது; முன்னாள் ஆசைகள்!

பெரும்பாலும் தங்களைத் தாங்களே
ஏமாற்றிக் கொள்வதில்; தனித்துவம்
வாய்ந்தவர்கள் சுயநலவாதிகள்!

உடலால் உள்ளமும், உள்ளத்தால் உடலும்,
பெரும்பாலும் வலுவிழந்தே போகிறது.
இந்த நவீன யுகத்தில்!

பெரும்பாலும் விளம்பரங்களில் மட்டுமே
விழிப்புடன் வாழ்கிறது. இன்றைய
ஆரோக்கியம்!

—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.





## ஆடிகாற்றின் எடை அறிந்தான்.

புதுமணமகன்
காற்றின் ஈரப்பதத்தில்
அவள் கண்ணீரின்
பிசுபிசுப்பு

—

சூர்யகலா சரவணன், B.E
கண்டிதம்பேட்டை.

## ஆராய்ச்சி

இதழ்கள் பயிலும்
இதழாராய்ச்சியில்
இதழ் கள் பிறக்கும்...
கவிகள் உணரும் கவியாராய்ச்சியில்
கவி கள் பிறக்கும்.

—

மதீரா,
அறிவிப்பாளினி,
இலங்கை.

# மழை

அங்கும் இங்குமாய் துளித்துளியாய்
எட்டு வைத்து பெய்யும் மழையில்
கோடைகால வெயிலானது பூமியை
குளிர்வித்து கொள்கிறது

நகலெடுக்கும் போதெல்லாம்
பெய்யாத மழையானது இடி
இடிக்கும் போதெல்லாம் முந்திக்
கொண்டு வருகிறது முதல் மழை

வாடிய பயிரை பார்த்திடாத
மழையானது அன்பை வாரி
கொடுக்கிறது

சில்லென்று துளிரும்
மழைத்துளியானது புல்லின்
நெடுங்கால சூட்டை தணிக்கிறது

சூரியனின் வெப்பத்தின் தாக்கத்தால்
வானில் இருந்து வெளி வருகிறது
வியர்வை யென்னும் மழை....

பகலில் பத்திரகாளியாகவும் இரவில்
மாரியாவும்
அவதாரம் எடுக்கிறது இந்த
கோடைகால மழை

கசக்கும் வெயிலுக்கு இனிக்கும்
மழையாய் பெய்கிறது பருவம் தவறி
மழை

—

ச. சத்தியபானு



## கீழ்காணும் கவிதைகளெல்லாம் கவிதைக்காரனின் பட்டாம்பூச்சி பறக்க எத்தனிக்கும் போது உதிர்த்து விட்டுப் போன கவிதைகள்.

அவள் பறக்க விட்ட
முத்தத்தை தான்
நீங்கள் பட்டாம்பூச்சி
என்கிறிர்கள்.

கொஞ்ச தூரம்
பறந்து சென்று
விண்கலத்தை
வழியனுப்பிவிட்டு வரும்
பட்டாம்பூச்சி.

விண்கலத்தை
வழியனுப்பி விட்டு வரும்
பட்டாம்பூச்சியை வரவேற்க
தயாராக நிற்கிறது உலங்கூர்தி (கெலிகாப்டர் )
தும்பி.

வண்டுகள் அமர்ந்ததும்
மெய்யெழுத்தாகிவிடுகிறது
பூக்கள்.

பறித்து விடுவார்களோவென
பூக்களை மூடி மறைக்கிறது
பட்டாம்பூச்சி.

—

ஆனந்தன்,
திருப்பூர்.



# துளிப்பா

அலைகள் வந்து
கரையை தொட்டது
புயல் சீற்றம்

சீற்றமாய் எழுந்து
ஓடிக் கொண்டிருந்தது
காட்டுக்குள் அரவம்

அரவத்தின் நடமாட்டம்
அதிகமாய் இருந்தது
எரிபொருள் விலை

விலை ஏற்றம்
அறிவிப்பு வெளியிட்டது
பணி நியமனம்

நியமன வேலைகள்
குறைந்து வருகின்றன
மழைநீர் சேகரிப்பு

சேகரிக்கப்பட்ட நெகிழிகள்
அழித்து ஒழிக்கப்பட்டன
கள்ளச்சாராய ஊறல்

ஊறிடும் ஊற்றுநீர்
சுவையாக இருந்தது
சிறுதானிய உணவு

உணவே மருந்து
மூத்தோர் சொன்னது
அனுபவ பாடம்

பாடங்கள் யாவும்
மாறிக் கொண்டிருந்தன
பழக்க வழக்கம்

வழக்கமான பணிகளில்
ஓடிக் கொண்டிருந்தன
நீரின் அலைகள்

—

செ. இலட்சுமணக்குமார்,
ஈரோடு.

---

# மனிதன்...!

கருவறையில்.
இருந்து வந்த.
மனிதனே மனிதனை.
மறந்துவிட்டு.

பல்வேறு.
ஜாதி மதங்களையும்.
ஏற்றத்தாழ்வுகளையும்.
சுமந்து கொண்டு.
அலைந்து திரிகிறான்...!

இறைவன் மட்டும்.
நிம்மதியாக.
கருவறையில்.

## குளம்

மீதமிருக்கும்.
ஈரம் கரையைத் தொட.
முயற்சி செய்கிறது.

கோடையை எண்ணி.
வாடி நிற்கிறது,
கொக்கு.

தன்னால்
முடிந்தவரையில்,
சிறுநிழலைக் கொடுத்துவிடுகிறது,
சிறுமரம்...!


ஆம்.
குளம்,
உறவுகளை.
பரிச்சியிக்க திரும்புகிறது.
கோடை காலம்.

—

அ. செல்வராஜ்,
உடுமலைப்பேட்டை,
திருப்பூர் மாவட்டம்.
கைப்பேசி: 9524960630



# மாடும் உழவனும்



மாடு என்ற சொல்லின் பொருளே "செல்வம்" என்பது தான். மாடுகள் இல்லாமல் மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியே இல்லை. மாடுகளுக்கும் மனிதனுக்குமான ஒரு பந்தம் இன்று,நேற்றல்ல சங்க கால வரலாற்றில் கூட சான்று இருக்கின்றது. ஆதிகாலம் முதல் மாடு மனிதனின் ஒரு அங்கமாகவே இருந்திருக்கின்றது. காலங்காலமாக மாடுகளால் மனிதன் என்றும் பயன்பெறுகிறான். அவ்வளவு ஏன் இறைவழிபாட்டில் கூட நம் தெய்வங்களுக்கு வாகனமாக மாடுகள் உள்ளன.

மாடுகளை வெறும் கால்நடைகளாக கருதாமல் தன் வீட்டில் ஒரு குடும்ப உறுப்பினராக எண்ணி அன்பின் மிகுதியால் புகைப்பட நிலையத்துக்கு கூட்டிச்சென்று தன் வீட்டு மாடுகளை தன் குடும்பத்தினருடன் நிக்கவைத்து புகைப்படம் எடுத்து அழகு பார்த்த உயிர்மநேயம் தமிழினத்தில் மட்டுமே உண்டு.

ஒரு நாட்டின் ஆநிரைகளை கவர்ந்து வருவதும், அந்த நாட்டின் மீது போர் தொடுத்து செல்வதும் ஒன்று தான் என்று கூறுகின்றது புறநானூறு. ஒரு அரசன் அந்த நாட்டின் ஆநிரைகளை இழப்பதும், ஆட்சியை இழப்பதும் ஒன்றாகும் என்று சங்க கால போர்முறைகளில் சொல்லப்படுகிறதென்றால் ஆநிரைகள் ஒரு நாட்டின் எவ்வளவு பெரிய

வளமாக இருந்திருக்கும் என்பதை அறிய முடிகிறது.

முற்காலத்திலிருந்தே மாடுகளின்றி மனிதனின் வாழ்வில்லை. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு பயணம் செய்ய எந்த வித வசதிகளும் இல்லாத அந்த காலத்தில் மாடுகள் தான் மனிதனுக்கு வண்டிகள் மூலம் பயணம் செய்ய பெருந்துணையாக இருந்தது. கிராமத்துல உள்ளவர்கள் தங்கள் மாடுகளுக்காகவே வெளியூருக்கோ,உறவினர் வீட்டுக்கோ எங்கயும் போக மாட்டார்கள், ஒருவேளை முக்கியமான காரியத்துக்காக சென்றாலும் மாலைக்குள் வீடு திரும்பும் எண்ணத்திலேயே இருப்பர். உறவினர் வீட்டில் சென்ற இடத்தில் " அண்ணன் ரெண்டு நாள் கழிச்சி போகலாமே என்ன அவசரம்? வந்த உடனே போறேன்னு கௌம்புறீங்களேன்னு கேட்கும் தங்கச்சியிடம், " மாடு கண்ணெல்லாம் கெடக்குமா, வக்கல்ல புடிச்சி கட்டுனத்தோட வந்துட்டேன் பசியா கெடக்கும் போயி தண்ணி வைக்கணும் " இல்லனா கெடந்து  கத்தும் பாவம் என்று தன் மாட்டின் நினைப்பாவே இருக்கும் மனிதனின் பாசம் விலையுயர்ந்தது.

ரெண்டு மூன்று நாட்களாக ஒழுங்காக தண்ணீர் குடிக்கவில்லை, வைக்கோல் எதுவும் ஒழுங்காக உண்ணவில்லை என்றால் தன் மாட்டுக்கு உடம்புக்கு முடியவில்லை என்பதை மறுகணமே உணர்ந்து வேகமாக சென்று பிரண்டையை எடுத்து வந்து மாட்டின் மேல் போட்டு விஷம் தண்டியிருந்தால் போக்குவதும், இல்லை குமட்டிக்காயை மாட்டுக்கு கொடுத்து மாட்டின் உடலை சரிபடுத்துவதுமாய் அந்த மாட்டின் உடல் நிலையை சரியாக்க பாடுபடுவான் அந்த உழவன். பொதுவாக இந்த இரண்டு முறைகளிலேயே மாடு குணமடைந்து விடும். அப்படியும் குணமாகவில்லை என்றால் மருத்துவரை அழைத்து வந்து அந்த மாட்டை குணமாகும் வரை எந்த வேலையும் செய்யாமல் அந்த மாட்டுடனே நேரத்தை செலவிட்டு அந்த மாடு குணமடைந்த பிறகே அவன் மகிழ்ச்சியடைவான். அதுவரை அந்த உழவனுக்கு உணவு உண்ணவே மனமிருக்காது.
மழை வந்தால் கூட உடனே ஓடிப்போய் வெளியே கட்டிக்கிடக்கும் மாட்டை அவிழ்த்து கொட்டகையில் கட்டி விட்டு தான் நனைந்தாலும் தன் மாடு நனையக்கூடாது என்று நினைப்பான்.

உலகத்தில் எந்த இனத்திலும் இல்லாத ஒரு உயிர்மநேய பண்பு தமிழினத்தில் இருக்கின்றது. தான் மட்டுமின்றி வருடம் முழுவதும் தன்னுடனே கிடந்து தனக்காக அயராது உழைத்த தன் மாடுகளையும் தனக்கிணையாக எண்ணி குளிப்பாட்டி புது கயிறு, சலங்கைகள் கட்டி,கொம்புகளுக்கு வண்ணம் தீட்டி,பொட்டு வைத்து மாடுகளுக்கென்று தனியே பொங்கலிட்டு குடும்பத்துடன் வணங்கி நன்றி தெரிவிக்கும் மாட்டுப்பொங்கல் விழா தமிழர்கள் மனிதநேயர்கள் மட்டுமல்ல உயிர்மநேயர்கள் என்பதற்கு பெரும் சான்று!

வீட்டின் சிறு பிள்ளைகள் மாட்டு வண்டியின் நுகத்தடியில் ஏறி விளையாண்டால் உடனே அவர்களை அதில் விளையாடக்கூடாது என்று கடிந்து கொள்வான் அந்த வீட்டின் உழவன்.

ஏனென்றால் நுகத்தடியில் ஏறினால் அதில் அழுத்தம் ஏற்பட்டு அதனால் வண்டியிழுக்கும் போது மாட்டுக்கு கழுத்து வழியை உண்டாக்கும்  என்பதை அறிந்து தான்.

மனிதர்களிடையே மரியாதையை குறையும் இந்த காலங்களில் இன்னும் சில கிராமங்களில் உள்ளவர்கள் தங்கள் மாடுகளை அவோ, இவோ என்று மரியாதையாகத்தான் அழைப்பார்கள்.

ஒரு உழவனுக்கு அவன் வாழ்வில் பெரும்பங்கு நேரம் செலவிடுவது அந்த மாடுகளுடன் தான். காலையில் மாட்டை அழைத்துக்கொண்டு வயலுக்கு செல்வதும் ஏர் பூட்டி உழுதுவிட்டு பின்பு மாட்டை ஆறு, குளங்களில் குளிப்பாட்டி விட்டு வாய்க்காலில் கட்டி விடுவான். பின்பு மாலை பருத்திக்கொட்டை, புண்ணாக்கு சேர்த்து தண்ணீர் வைத்து விட்டு வைக்கல் போரில்  கட்டி போடுவான் இப்படி காலை முதல் இரவு வரை மாடு தான் அவனுக்கு உற்ற நண்பன். தான் உண்வருந்தாவிட்டாலும் தன் மாட்டுக்கு உணவில்லை என்றால் உயிரையே விட்டுவிடுவான்.

மாடு வாங்கி சில நாட்களில் உழவன் அந்த மாட்டை மேய்க்க போகும்போது அது திசை மாறி எங்கும் சென்று விடாமல் ஒரு முளைக்குச்சியை ஊன்றி ஓரிடத்தில் கட்டுவான். சில மாதங்களான பிறகு அந்த மாடு தனியே தன் வீட்டிற்கு சரியாக வந்துவிடும்.

அதைப்போலவே இரவு நேரங்களில் தொலைதூரத்திற்கு எங்கேயாவது வெளியே சென்று வீடு திரும்பும்போது வண்டியில் மாட்டை பூட்டிவிட்டு கயிற்றை வண்டியில் கட்டிவிட்டு அந்த உழவன் அசந்து தூங்கிவிட்டாலும் அந்த மாடுகள் வீட்டை சரியாக  அடையாளம் கண்டுபிடித்து வந்து சேர்ந்துவிடும். அந்த அளவிற்கு மனிதனுக்கு விசுவாசமாக உழைத்த ஐந்தறிவு படைத்த உயிர்கள் மாடுகள். மனிதர்களுடன் சேர்ந்து அஃறிணைகள் கூட அளவில்லாத அன்பை காட்டுகின்றன.

அந்த காலத்தில் கிராமங்களில் இரவு நேரத்தில் யாருக்கேனும் ஏதேனும் உடல் நலமில்லாமல் அவசர சிகிச்சை தேவைப்பட்டால் எந்த வித மருத்துவ வசதிகளோ, மருத்துவமனைகளோ அங்கு இல்லாத காரணத்தால் நகரத்திற்கு செல்ல வேண்டிய சூழலில், போக்குவரத்து வசதிகளும் இல்லாத அன்றைய காலங்களில் இரவு எந்நேரமிருந்தாலும் உடனே  கொட்டு வண்டிகளை கட்டி மாடுகளை பூட்டி நகரத்தில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்று மருத்துவரை பார்த்து குணப்படுத்துவதில் முக்கிய பங்கு அந்த மாடுகளையே சேரும்.

தாய் கூட தன் பிள்ளைகளுக்கு பிறந்து சில மாதங்களே பாலூட்டுகிறாள் ஆனால் தன் வீட்டு மாடுகளோ வெறும் புல்லையும், வைக்கோலையும் தின்றுவிட்டு தன் ஆயுள் வரை பால் தருகின்றன. பால் மட்டுமல்ல சுவையான தயிர்,மோர், வெண்ணெய் மற்றும் நெய் என்று

பல்வேறு படிநிலைகளில் நமக்கு சுவையான உணவை தருவது கருணையுடைய மாடுகள் தான்.

மாடு கன்று போடும் தருவாய் என்பது அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு தன் வீட்டில் உள்ள ஒரு பெண்ணுக்கு மகப்பேறு பார்ப்பதை போன்ற ஒரு நிகழ்வாக கருதுவார்கள். மாடு கன்றை வெளியே எடுக்கும் வரை அந்த வீட்டில் உள்ளவர்கள் ஒரு பிள்ளைப்பேறு பார்க்கும் மனநிலையுடன் பரபரப்புடன் மிகுந்த பதட்டத்துடனே இருப்பார்கள். கன்று வெளியே வந்ததும் அதன் கால் கொழுப்புகளை நன்கு கீறிவிட்டு பின் நடக்க வைக்க முயல்வார்கள். பின்பு குட்டியை ஈன்ற மாட்டை குளிப்பாட்டி ஆளாத்தி எடுத்து வணங்கி மகிழ்வார்கள். கன்று பிறந்த நாளில் சுவையான சீம்பால் கிடைக்கும் அதன் சுவை அளாதியானது.

"இவன்" பொறந்தப்ப அவங்க அம்மாவுக்கு பாலே இல்ல, உடனே தாத்தா ஒரு கறவை மாட்டை வாங்கியாந்து கட்டுனாரு. மாட்டு பால் குடிச்சி தான் வளந்தானு இன்றும் கிராமத்தில் சில வீடுகளில் பாட்டிகள் சொல்லுவார்கள்.

மாடுகளை தன் அண்ணன், தம்பிகளாக எண்ணி அவர்களுக்கு தனக்கு பிடித்த பெயரிட்டு அழைத்து அந்த மாடுகளை சல்லிக்கட்டுக்காக வளர்த்து யாருமே அடக்க முடியாத படி அந்த மாடுகளை நன்கு வளர்த்து பெருமிதமடையும் ஒரு குணம் தமிழர்களின் மரபிலே உள்ளது. மாடுகளை ஓடவிட்டு அடக்குபவருக்கே தங்கள் வீட்டு பெண்களை மணமுடித்து வைக்கும் வீர மரபினர் தமிழர்கள். வீரத்தை மாடுகளின் மூலம் வளர்த்திருக்கின்றனர்.

மாடுகள் உழவர்களின் உற்ற நண்பன் என்றும் கூறலாம். காளை மாடோ, பசு மாடோ எந்த மடாயினும் அவைகளால் பெரும் பயனடைவது எப்போதும் மனிதர்கள் தான். மாட்டு பால் உணவு, மாட்டின் சாணம் வயலுக்கு எருவாக பயன்படுகின்றது, அதே சாணம் காலையில் வாசல் தெளிக்கவும்,வீட்டை மெழுகி கோலம் போடவும் ஒரு கிருமி நாசினியாக பயன்படுகின்றது. ஏறு பூட்டி உழவும், வயல் பரப்பை சமன் செய்யவும், நிலத்தை பண்படுத்தவும், வண்டி இழுக்கவும் மாடுகள் பயன்படுகின்றன.

அன்றைய காலங்களில் நெற்கதிர்கள் அறுவடையில் மாடுகளின் உழைப்பு பெரும்பங்கு உண்டு. மாடுகள் உணவுச்சங்கிலியின் முன்னோடி என்பதே உண்மை. நெற்கதிர்கள் அறுவடையில் நுனி வீட்டுக்கு, நாடு மாட்டுக்கு, அடி காட்டுக்கு என்பது கையால் நெல் அடிக்கும் போது சொல்லும் வழக்கம். அந்த நடுவில் உள்ள வைக்கோல் என்பது மாட்டுக்கு உணவு, அதை மாடு தின்றுவிட்டு அது போடும் சாணம் எருவாக மாறி வயலுக்கு உரமாக பயன்படுகின்றது. அந்த உரம் பயிர்களை நன்கு வளரவைக்கின்றது பின்பு அதே சுழற்சி முறை மீண்டும் மீண்டும் இது ஒரு தற்சார்பு பொருளாதாரத்தை உருவாக்குகின்றது.

அன்றைய காலங்களில் கிராமங்களில் கிடை மாடு மேய்ப்பவர்கள் இருப்பார்கள் முதல்

மாடுகளை கூட்டம் கூட்டமாக மேய விட்டு ஓரிடத்தில் வயல்களில் கிடை வைத்து அந்த மாடுகளின் சாணம் மூலம் அந்த வயலில் உரத்தை நிரப்பும் ஒரு அறிவியலும் தமிழர்களிடம் இருந்தது. ஆனால் இது நாளடைவில் நம் நாட்டில் குறைந்து விட்டது.

எள்ளு,கடலை,தேங்காய் போன்றவற்றை செக்கில் வைத்து ஆட்டி பலவிதமாக எண்ணெய் எடுக்கவும் மாடுகள் தான் பயன்பட்டன.

கடலை கொள்ளைக்கு, எள்ளுக்கும்,உளுந்துக்கும் தண்ணி இறைக்க மாட்டை பூட்டி பூட்டை, சாளை வைத்து மாடுகளை முன்னும் பின்னும் இழுத்து தண்ணியை 40 அடி ஆழத்திலிருந்து இறைத்து நிலத்தில் ஊற்றி தண்ணி பாய்ச்ச நம் முன்னோர்கள் மாடுகளை தான் பயன்படுத்தினார்கள்.

நம்முடன் கூடப்பிறந்த, நம்மில் ஒருவராகவே, நம் சொந்தங்களாக நினைத்து வாழ்ந்த, நமக்காகவே உழைத்த மாடுகளை மறந்து பன்னாட்டு நிறுவனங்களின் சூழ்ச்சியால் நம் பாரம்பரியங்களை இழந்து அந்நிய மோகத்தில் பழமை என்ற பெரும் பொக்கிசத்தை தொலைத்து கேடுகளை நாமே தேடிக்கொண்டோம்.

மாடுகளை தொலைத்து உழவுந்தை பயன்படுத்த தொடங்கியதில் மாடுகள் அழியத்தொடங்கின. மாடுகள் இல்லாததால் மாட்டு சாணம் என்ற எரு இல்லாமல் போனது அந்த இடத்தை ரசாயன உரங்களை வைத்து நிரப்பின பன்னாட்டு நிறுவனங்கள். வித விதமான ரசாயனங்களால் மண்ணின் வளம் குன்றியது அதனால் மண்ணில் வாழும் சிறு சிறு உயிர்கள் அழிந்து போனது அது நெற்பயிர்கள் வளர்ச்சியை பெரிதும் பாதிக்க, அந்த உரங்களுக்கு ஏற்ற மரபணு மாற்றப்பட்ட குட்டை நெற்பயிர்கள் அந்த பன்னாட்டு நிறுவனங்களாலேயே அறிமுகப்படுத்த பட்டன.

அன்றிலிருந்து மனிதன் பலவகையான நோய்களுக்கு ஆட்பட்டான். அவனுடைய ஆயுட்காலமும் மெல்ல மெல்ல குறைந்தது. நூறு வயது வரை நோய், நொடியில்லாமல் வாழ்ந்த மனிதன் இன்று ஐம்பது வயதிலேயே மாத்திரைகளுக்கு அடிமையாகிவிடுகிறான் அதை வைத்து பெரிய வியாபாரமே நடந்து கொண்டிருக்கிறது.

ஆக ஒரு மாட்டின் பின்னால் எத்தனை நன்மைகள் புதைந்திருக்கின்றன. பன்னாட்டு நிறுவனங்கள் நம் மாட்டின் மகத்துவத்தை நன்கு அறிந்ததால் தான் மாடுகளை பெருக்கும் சல்லிக்கட்டை தடை செய்ய திட்டமிட்டனர்.

தமிழ்நாட்டின் எத்தனையோ பிரச்சனைகளுக்கு தமிழர்கள் தனித்தனியே போராடியிருந்தாலும், நம் மாட்டுக்கு ஒரு பிரச்சனை வந்த போது உலகத்தமிழர்கள் அனைவரும் ஒன்றுகூடி போராட்டத்தில் இறங்கியது சல்லிக்கட்டுக்காக தானே. காரணம்



மாடுகளுக்கும் நமக்கும் உள்ள பந்தம் நம் ரத்தத்திலேயே கலந்துள்ளது.

இப்படி மாடுகள் எப்போதும் மனிதனுக்கு நன்மை பயக்கும் உயிராகவே இருக்கின்றன. ஆனால் இன்றைய காலத்தில் மனிதர்களாகிய நாம் தான் சுயநலத்தினால் நன்றி மறந்து,மாடுகளை போற்ற மறந்துவிட்டோம். மாடுகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்வது பிறப்பு முதல் இறப்பு வரை மட்டுமல்லாது இறந்த பின்னும் மற்றவர்களுக்கு பயனுள்ள வகையில் வாழ்ந்துவிட்டு செல்வது தான்.

மாடுகள் இல்லாது உழவு இல்லை. உழவு இல்லாமல் உயிர்கள் இல்லை. உயிர்கள் இல்லாமல் இந்த உலகமே இல்லை. காலம் மாறும், மாடுகள் இல்லாமல் மனித வாழ்வில்லை என்ற நிலை மீண்டும் வரும். ஆகவே மாடுகளை போற்றுவோம். மாடுகளின் மகத்துவத்தை உணர்ந்து அடுத்த தலைமுறைக்கு கடத்துவோம்.

— நா. செல்வமுருகன், சிங்கப்பூர்.

---

# பொய்கால் குதிரை

பணம் யாருக்கு வேண்டுமானாலும்
யார் வேண்டுமாலும்
செலுத்திக் கொள்ளலாம்,
ஆனால்
ஒரு ரூபாய் பணத்தை
எடுக்கும் போது மட்டும்
கையொப்பம் ஒரே
மாதிரி தான் இருக்க வேண்டும்,

வேலை, வெட்டி இல்லாமல்
சண்டைப் போட்டு,
நியாயம் கேக்க
போனால் கூட
ஒரு கோயர்
பேப்பர் ரோட
போக வேண்டியதிருக்கிறது,

கல்வி, வேலைவாய்ப்பு,
நில வணிகம்,
வெளி நாடு என
ஏதேனும் சேவைக்கான
அழைப்பு வரும்போதுதெல்லாம்
அவர்களின் பெயரை
யாரோ ஒருவர் ஏமாற்றுப் பேர்வழி
என்று பதிவு செய்திருப்பதை
ட்ரு காலர் காட்டுகிறது.

பத்து பேர்
பணம் கட்ட
வரிசையாக
நிற்கும் போது
கல்வி கட்டணத்தைக் கட்ட
காத்திருந்தவரை
முதலாவது அழைத்தார்
காசாளர்.
*

ஏதோ பெரியவங்க
பேசிட்டு இருக்கும் போது
என்னனுக் கேட்டா
சுரைக்காய்க்கு
உப்பில்லைன்னு
சொன்னாங்க,

நான் இதை
எங்கேக் கொண்டு
வைக்கனும் ?
கேட்டா
நாய் குரைக்கும் போது
குப்பையில் போடுன்னு
சொன்னாங்க,

மழையும் பெய்யுது
வெயிலும் அடிக்குது
என்னன்னுக் கேட்டா
காக்காவுக்கும்,
நரிக்கும்
கல்யாணம் அப்படினாங்க,

தாம்பூல வெத்தலையை
நான் சாப்பிடப் போறேன்னு
சொன்னா,
கோழி வந்துக் கொத்தும்ன்னு
அந்த அக்கா சொல்லுறாங்க,

இப்படிப் பட்ட கதைகள்
சுவாரசியமாகச் சொல்ல
இந்தக் காலத்தில்
கதைச் சொல்லிகளும்
இல்லாமல் போய் விட்டார்களே
என்று நினைக்கும் போது
மட்டும்
அந்தக் கதைகளை விட
வேதனையாய் இருக்கிறது
*

கவிதை அதிகாரம்

இதுவரை
அவர்கள்
தொடர்பு கொள்ளப்
பேசிக் கொண்டிருந்த மொழியே
இன்று அவர்களைப்
தனித்தனியேப்
பிரித்து விட்டது
*

நேற்று மக்கள் கூடிய சந்தை
இன்று வெறுமையாய் இருக்கிறது
ஆனால்
புறாக்களும் பறவைக் கூட்டங்களும்
தங்கள் பங்கை
கடை, கடையாய்
கொறித்துக் கொண்டிருக்கிறார்கள்,
*

இங்கே மது அருந்தாதீர்
மீறினால் சட்டப் படி
நடவடிக்கை எடுக்கப் படும்
அறிவிப்பு பதார்தை
அடியில்
காலி புட்டிகளும்,
காகிதக் குடுவைகளும்

—



இரா. மதிராஜ்
காங்கேயம்.
அலைபேசி: 9788475722

# உலகம்

உருண்டை உலகம் உருளுது
புதுமை கண்டு மிரளுது.
தொழினுட்பம் வளருது
தொடர்புகளை வளர்க்குது.

தொடர்புகொள்ளும் தெலைபேசி
தொல்லைகளை கொடுக்குது.
எல்லைகளை சுருக்குது
எல்லாத்தையும் கெடுக்குது.

விரலசைவில் விளக்கம்
வரும் வினாக்களுக்கு.
புவியசைவில் நடுக்கம்
வரும் கனாக்களுக்கு.

இமையசைவில் இயக்கம்
வரும் இயந்திரத்திற்கு.
இறுதியிலே நடுக்கம்
வரும் மனுக்குலத்திற்கு.

பழமைகளை நாடியவர்
துருப்பிடித்துப் போகிறார்.
புதுமைகளை தேடியவர்
புவியிதனிலே வாழ்கிறார்

எப்பொழுதும் கற்பவனே இருக்கிறான்.
எண்ணியபடி நடப்பவனே
பிழைக்கிறான்.
ஏழைமக்கள் மட்டுமே
இருந்த இடத்தில் இருக்கிறார்.

கடவுகள் இல்லை என்பவனே
பகுத்தறிவு ஆளன்.
கடவுளரை படைத்தவனே
கட்டுக்கதைக் காரன்.

விஞ்ஞாய் வளர வளர
அஞ்ஞானமும் வளருது.
மெஞ்ஞானம் வளர வளர
முடநம்பிக்கை வளருது.

வெட்டவெளிக்குள் இருக்கும்
புவியில் இத்தனையும் நடக்குது.
வெளியில் நின்று உற்றுப் பார்த்தால்
உண்மை எல்லாம் விளங்குது.

—

கோ. தனுசன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

---

# ஒடன்போவம்...

ஒனக்குத் தொணையா நானும்
ஒன்னோடக் கைத்தடியும்!

எனக்குத் தொணையா நீயும்
என்னோடக் கைக்கொடையும்!

நமக்குத்தான் ஆறுதலா யாரிருக்கா?
நாயாதான் தொரத்துதுங்க நம்ம மக்கா?

அன்பெதுன்னும் புரியலியே!
அரவணைக்கத் தெரியலியே!

ஆயுசுக்கும் ஒழச்சதுக்கும்
அனாவசியம் நாமயிப்போ!

மூணுவேளை சோறுக்குதான்
முணுமுணுப்பா பேச்சுதான்!

ரெண்டுவேள டீத்தண்ணி
இருமலு வந்தாக்க வெந்நீ

பெத்ததுக்குக் கடனாவே
ஒத்தபய கொடுப்பானா?

ஊடிருக்கு நமக்குன்னு ஒக்கார
ஒருநாளும் யாருவிட்டா கண்ணயர?

காசுபணம் கொடுத்துதானா பாசம்?
பாசத்துக்காவ போடுறாங்க வேசம்!

உசிரிரிருந்தா வயிராற சோறில்ல!
பசியிருந்து வாழுறதோ பெருந்தொல்ல!

உசிரவிட்டா பங்குபோடும் உரிம!
ஒடன்போவும் வூடுந்தான் கொள்ள!

—

**கவிஞர் மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி.

---

# அன்பின் மொழியே

தூரம் சென்றாலும்
உன்னைப் போல்
ஓடி வருகிறது
உன் நினைவுகள்

தூரம் தான்
நெருக்கத்தை மேலும்
கூட்டி விடுகிறது

கோடை மழை போல
பிரிவின் துயரில்
நினைவு மழை
ஆறுதலைத் தருகிறது

உன்
காலடித் தடங்களில்
கண்களைப் புதைத்தேன்

பட்டாம்பூச்சியைப் போல
இமைகள் சிறகடிக்கின்றன

எல்லா உறவுகளுக்கும்
வெள்ளைக் கொடியைப் பிடிக்கும்
தொப்புள் கொடி நீ!

இன்னும்
பேச ஆரம்பிக்கவில்லை
என்று சொல்லி...
உன் மொழிதலுக்கு
ஆயிரம் அர்த்தங்களை
அளிக்கிறோம்
நாங்கள்

தவழ்ந்து வந்து
காலைப் பிடிக்கையில்...
முதன் முதலாக
குனிந்து ரசிக்கிறேன்
ஓர் அன்பின் மலையை

மழலையே!
உண்மையில்
நீ தான்
அ... ஆ...
சொல்லித் தருகிறாய்

உன்னைப் போல
நாங்கள் மாறுவதை மறந்து
என்னைப் போல
நீ என்று சொல்லி
இரசித்து மகிழ்கிறோம்

உனக்கு
பொன்னகைகளை அளிக்கையில்
நீ மட்டுந்தான்
எல்லோருக்கும்
விலை மதிப்பில்லா
புன்னகையை பரிசளிக்கிறாய்

குழந்தைக்கு
என்ன தெரியும்
என்கிறார்கள்...
வாழ்வின் பொருளை
ஒவ்வொரு நொடியும்
போதிக்கிறாய் நீ!



—

சா. கா. பாரதி ராஜா,
செங்கல்பட்டு.
அலைபேசி: 9944315732

# வ.உ.சி யின் வாழ்வியலும் வீரச் செயல்களும்

## முன்னுரை:

சுதந்திரப் போராட்டத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட வ.உ.சிதம்பரனார் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அரசியல் தலைவர். அதன் காரணமாகவே வ.உ.சி சிதம்பரனார் என்றதும் அவரது அரசியல் செயல்பாடுகள் தான் முதலில் நினைவுக்கு வருகின்றன. நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் அவர் ஆற்றிய தமிழ்ப்பணிகள் பெரிதும் பாராட்டிற்கு உரியது. தமிழர் தமிழறிஞர்களின் வரிசையிலும் வ.உ.சி விடுதலைப் போரிலும் சிறைவாசம் அனுபவித்த தமிழர் அறிஞர்களுள் ஒருவர். வ.உ.சி சிதம்பரனாரின் வாழ்வியலையும் வீர செயல்களையும் ஆய்வு கட்டுரை வழியாக காணலாம்.

## வ.உ.சியின் சிதம்பரனாரின் வாழ்வியல்:

இவரது இயற்பெயர் வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை. 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் நாள் தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் சைவ வேளாளர் மரபில் உலகநாத பிள்ளை, பரமாயி அம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாகப் பிறந்தார்.

## கல்வி:

*ஆறு வயதில் வீர பெருமாள் அண்ணாவி என்ற தமிழ் ஆசிரியரிடம் தமிழ் கற்றுக் கொண்டார். அரசாங்க அலுவலரான திரு கிருஷ்ணன் வ.உ.சிக்கு ஆங்கிலம் கற்பித்தார். 14 வயதில் தூத்துக்குடிக்கு சென்று புனித சேவியர் பள்ளியிலும் கால்டுவெல் பள்ளியிலும் கற்றும் திருநெல்வேலியில் இந்த கல்லூரியிலும் சேர்ந்து கல்வி கற்றார்.*

## வழக்கறிஞர் தொழில்:

*வ.உ.சி சில காலம் தாலுகா அலுவலகத்தில் பணிபுரிந்தார். பின்னர் அவரது தந்தை அவரை சட்டங்கள் பெற திருச்சிக்கு அனுப்பி வைத்தார். கணபதி ஹரிஹரன் ஆகியோர் அவருக்கு சட்டம் கற்பித்தனர். அவர் சட்டத்தேர்வை 1894 ஆம் ஆண்டு எழுதி தேர்ச்சி பெற்றார். 1995 ஒட்டப்பிடாரத்தில் வழக்கறிஞர் தொழிலை துவங்கினார். அவர் உரிமை இயல் மற்றும் குற்றவியல் என இரு வகை வழக்குகளை கையாண்டாலும் குற்றவியல் வழக்குகளின் சிறப்பு தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் வசதியற்றவர்களுக்காக இலவசமாக வாதாடினார். வழக்குகளுக்காக இடைத்தருகர்களுக்கு பணம் கொடுப்பதை ஆதரிக்கவில்லை. வ .உ. சி பெரும்பாலான வழக்குகளில் வெற்றி பெற்றார். சில வழக்குகளில் இரு கட்சி இனரும் சமாதானமாக போகும் வழி செய்தார். அவருடைய தகுதி, திறமை காரணமாக நீதிபதிகளின் மதிப்புக்குரியவராக இருந்தார். காவல்துறையினரால் தவறாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் வ.உ.சி யினால் விடுதலை ஆனதால் காவல்துறையினரின் கோபத்திற்கு ஆளானார். இச்சூழ்நிலையை விரும்பாத அவரது தந்தை வ.உ.சி 19 ஆம் ஆண்டு தூத்துக்குடிக்கு சென்று பணியாற்றும்படி அனுப்பி வைத்தார். வ. உ. சி தூத்துக்குடியிலும் புகழ்பெற்ற வழக்கறிஞர் ஆனார்.*

## திருமணம்:

*1895 ஆம் ஆண்டு வள்ளி அம்மையார் உடன் நடைபெற்றது வள்ளியம்மையார். 1900 ஆம் ஆண்டு தலை பிரசவத்தில் இறந்து விட்டார். பின்பு வ.உ. சிதம்பரான திருமணம் மீனாட்சி அம்மாளுடன் எட்டு செப்டம்பர் 1901 ஆம் ஆண்டு குடியில் நடந்தது.*

## பாரதியாருடன் நட்பு:

*வ.உ.சி சென்னைக்கு செல்லும் போது பாரதியாரை சந்தித்ததை விளக்கமாகக் கொண்டிருந்தார். இருவரின் தந்தையாரும் நெருங்கிய நண்பர்கள் இருவரும் சந்தித்துக் கொண்ட பொழுது இருவரின் கருத்துகளும் ஒன்றாக இருப்பதை அறிந்தனர். இருவரும் எப்பொழுதும் நாட்டைப் பற்றிய பேசிக் கொண்டிருப்பார்கள். பாரதியார் தனது உணர்ச்சி மிக்க பாடல்களால் நாட்டு மக்களை தேடி தட்டி எழுப்பினார். வ.உ.சி செய்யும் பாரதியாரும் நெருங்கிய தொடர்பு நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். வ.உ.சி சமுதாயப்பணியிலும் தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் மக்கள் செல்வாக்கு மிகுந்த தலைவராக விளங்கினார். அவர் ஆளுமை மிக்க மனிதர் அவர் சுதேச பிரச்சார சபை, தர்ம*

*சங்க நெசவு சாலை, தூத்துக்குடி கைத்தொழில் சங்கம், சுதேசிய பண்டகசாலை,வேளாண் சங்கம் போன்றவற்றை ஏற்படுத்தினார்.*

## கப்பல் நிறுவனம் சுதேசிய நாவாய் சங்கம்:

*வ.உ.சி 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் சுதேச நாவாய் சங்கம் என பதிவு செய்தார். வட இந்தியாவிற்கு கிளம்பும்போது திரும்பினால் கப்பலுடன் வருவேன் இல்லையேல் கடலில் கரைந்து போவேன் என்று சென்றார். வ.உ.சி தனது சம்மதத்தை நிறைவேற்றினார். "எஸ் எஸ் காலியோ" என்று கப்பலுடன் இருக்கின்ற அனைவரும் பெரு மகிழ்வு அடைந்தனர்.*

## அரசியல் பணி:

*மக்களிடையே விடுதலைப் போராட்ட உணர்வை தூண்ட நினைத்தார் இந்திய தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டும் ஆங்கிலே இருக்கிறது ஆங்கில அரசு அதிகாரி நாள் முழுவதும் இடைவெளி இடைவேளை இல்லாமல் 12 மணி நேரம் நேரத்திற்கு அதிகமாக கடிதம் ஆக உழைக்க வேண்டும் அவர்களுக்கு விடுமுறை கிடையாது தொழிலாளர்கள் ஏதேனும் தவறு செய்தால் கடுமையாக தண்டிக்கப்படுவர், தொழிலாளர்களின் அவல நிலையை பார்த்து வ.உ.சி மிகவும் வருந்தினார்.நூற்பாலை தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டினார்.*

*சுப்பிரமணிய சிவாவும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு செய்தனர். 1980-ம் ஆண்டு பிப்ரவரி 23ஆம் நாள் வ.உ.சி தூத்துகுடியில் சொற்பொழிவு ஆற்றினார். 1908 ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் நாள் நூற்பாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். நிர்வாகம் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டது கூலியை உயர்த்தவும் வேலைகளை வேலை நிறுத்தத்தை குறைக்கவும் ஞாயிற்றுக்கிழமை அன்று வார விடுமுறை அளிக்கவும் சம்மதித்தனர். முதல் தொழிற்சங்கமே 1920 ஆம் ஆண்டுதான் தொடங்கப்பட்டது. வ.உ.சி எல்லாருக்கும் முன்னோடியாக வழிகாட்டியாக திகழ்ந்தவர். சுதந்திர போராட்ட உணர்ச்சி மக்களிடையே கொழுந்து விட்டு எறிந்தது. வ.உ.சி சொல்லும் எதையும் செய்ய மக்கள் தயாராக இருந்தார்கள். தொழிலாளர்கள் உழைப்பாளிகள் என அனைவரையும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடச் செய்த பெருமை வ.உ.சி கே உரியது. அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் செயல்பட்டனர்.*

*காவல் துறையினர் வ உ சிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். வ.உ.சி ஆங்கில அரசுக்கு எதிராக சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். பிரிவு 123 வ..உ.சி சுப்பிரமணிய சிவாவிற்கு அடைக்கலம் கொடுத்தார். பிரிவு 153 அ  ஆங்கில அரசுக்கு எதிராக சந்திரபோராட்டத்தில் ஈடுபடும்படி மக்களை தூண்டி விட்டதாக 20 ஆண்டுகள் திவான் தண்டனை பெற்றார். சிவாவுக்கு ஆதரவு அளித்ததாக மற்றொரு 20 ஆண்டு தீவாந்திரன் தண்டனை பெற்றார் 40 ஆண்டு தீவந்தர தண்டனை யாருக்கும் கொடுக்கப்படாத*

கொடுமையான தண்டனை. ஆங்கில அரசுக்கு வ உ சி இடத்தில் அளவு கடந்த பயம் சில தண்டனை 198 1912 முதலில் கோயம்புத்தூர் சிறையிலும் பின்னர் கண்ணனூர் சிறையிலும் அடைக்கப்பட்டார். கடுமையான வேலைகள் செய்ய வேண்டும் சிறையாடைகள் முரடானவை தலையை மொட்டை அடித்து கை கால்களில் விலங்கிட்டு இருப்பர்.

செக்கிழத்தச் செம்மல் சிறையில் வ உ சி கடுமையான விடைகளை செய்தார். சணல் தோற்றார். அப்பொழுது அவரது உள்ளங்கைகளில் இருந்து ரத்தம் கசிந்தது. கல் உடைத்தார். மாடுகள் இழுக்கம் சிக்கினார். அந்த புகழ்பெற்ற வழக்கறிஞர் ஒரு மாடு போல உழைத்தார் 1912 ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் வ.உ.சி விடுதலை அடைந்தார். வ.உ.சி விடுதலைக்கு பின்னர் சென்னை கோயம்புத்தூர் கோவில்பட்டி தூத்துக்குடி ஆகிய இடங்களில் வசித்தார்.

## வ.உ.சி எழுதிய நூல்கள்:

கவிதைகளால் ஆனவை ஒன்று மெய்யறம் இரண்டு மைய அறிவு 3 பாடல் திரட்டு நான்கு சுய சரிதை உரை எழுதிய நூல்கள் இந்நிலை சிவஞான பேதம் திருக்குறள் ஆகிய நூலுக்கு நூல்களுக்கு உரை எழுதினார். பதிக்கப்பட்ட நூல் திருக்குறள் மணக்குடவர் உரையுடன் 1917 தொல்காப்பியம் இளம்பூரனார் . உரையுடன் 1928 வ.உ.சி எழுதிய கட்டுரைகள் கடவுளும் பக்தியும் கடவுளும் ஒரு கடவுள் ஒருவரை மனிதனும் அறிவும் வினையும் விதியும் விதி அல்லது ஓர் மனமும் உடம்பும் பத்திரிகை ஆசிரியராக பணியாற்றியவர். விவேக பானு இந்து நேசன் தி நேஷனல் ஆகிய பத்திரிகைகளுக்கு ஆசிரியராக பணியாற்றியுள்ளார். மொழிபெயர்ப்பு ஆசிரியராக இருந்தார். விழாவின் போது முன்னாள் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அம்மையாரால் 5 செப்டம்பர் 1972 ஆம் ஆண்டு பணியாற்றினார்...

## துணைநூற் பட்டியல்:

வ.உ.சியின் சிறை வாழ்க்கை
தமிழ் நேஷனல் வ.உ.சி பற்றிய தகவல்கள்
வஉசி தமிழருவி மணியனின் சொற்பொழிவு
வ உ சி யின் வரலாறு சா அருணாச்சலம்

—

திருமதி. ஜொ.சி.மோனிஷா,
கோயம்புத்தூர்.

ஓவியம்:
**மா. நிரல்யா,**
**இரண்டாம் வகுப்பு,**
**சிங்கப்பூர்.**



# இயைபுத் துளிப்பாக்கள்

1) அறுபட்டது உணவுச் சங்கிலி
ஊனுண்ணி இளங்கன்றைத் தவிர்த்த
போது
பலப்பட்டது அறத்தின் சங்கிலி...

2) அதிவேகமாகக் குறையும் நிலத்தடிநீர்
அபாயம் உணராவிட்டால்
அருங்காட்சியகத்தில் பார்க்கலாம்
கடைசி சொட்டு குடிநீர்...

3) படிக்கும் போது புரியப்போவதில்லை
ஓசோன் ஓட்டையும்
புவிவெப்ப உயர்வும்
புரியும்போது மனிதன்
இருக்கப்போவதில்லை...

4) மழைக்குத் தயாராகுது காடு
நத்தையின் வழித் தடத்தில் மின்னல்
உயிர்த்துளியை போற்றிப் பாடு...

5) பெங்களூரு தண்ணீர் தட்டுப்பாடு
பாரத தேசத்திற்கோர் எச்சரிக்கை மணி
பயன்பாட்டில் வேண்டும் கட்டுப்பாடு...

6) உயிர்வளி தரும் மரம்
உலகின் நுரையீர லாம் அதுவே
உயிர்வலி போக்கும் வரம்...

7) மலிந்து வருகிறது செயற்கை
சமநிலையை ஊடறுத்த மனிதப்
பேராசையால்
அழிந்து வருகிறது இயற்கை...

8) பல்லுயிர் போற்றி வாழ்க
உயிர்களைக் கொன்றழிக்கும் மாந்தர்க்கு
அதுவே
ஊழி எனக் கொள்க...

9) தன்னையே தரும் தரு
இயற்கை தந்த
கு(கொ)டையாம் அதனை
வளர்த்துக் கொண்டே இரு...

10) பெருநகரங்களில் குவியும் கூட்டம்
சுழியத்தை நோக்கி சென்று
கொண்டிருக்கிறது
நிலத்தடி நீர் மட்டம்...

—

அ. ஈடித் ரேனா,
கிராம நிர்வாக அலுவலர்,
புதுக்கோட்டை - 622003





**S. நிகிதா,**
**5ஆம் வகுப்பு, ஸ்ரீ பாரதி வித்யாலயா பள்ளி, மன்னார்குடி.**

# ஆராவின் உருவம்

விளக்கோடு பொறுந்திய ஆராவில்
பல இருளின் தடங்கள்
யார்தான் போரத்திவிடப் போகிறார்
மெழுகி இழந்த
வெளிச்ச நொடிகளை..!

கடைசி நிழல் விழும் வரை
வெளிச்சத்தின்
பெருமைத்தீ அடங்குவதேயில்லை

விரலினை நீட்டி அசைத்து
விளையாட்டு கட்டிடம்
நெருப்பின் விழுகளுக்கு
புகைப்படிந்த அசைவுகளே மிட்சம்

வீட்டில் விழுந்திட
இருள் மழுங்கி போனதுதான் மிட்சம்
விசிறிய இறகுகளில்
எல்லைகளின் தூரம்தான் அம்சம்

மீண்டும் மீண்டும்
பறந்துவிடும்
நிலைகளின் வேரெல்லாம்
பரல்களை நிரப்பியாடும்
இருள்களின் விதைத்துளிகள்

## கௌரவம் எட்டிப்பார்க்கிறது

எப்போதும் போல எட்டிப்பார்க்கும்
மனங்களுக்கு முன்னே
அரவமில்லாத கௌரவம்
எட்டிப்பார்க்கிறது

முன்னே சென்றவர் தவறவிட்ட
பத்து ருபாயை
நான் குணிந்து எடுக்கையில்

வாங்கி திண்பண்டம்
தவறிவிழுகையில்
எடுத்து உதறுகையில்

நூறு ருபாய் நிறைந்த
பர்சிலும்
இரண்டு ருபாய் நாணயத்தினை
தேடுகையில்

வாலாட்டி அருகில் வரும்
நாயின் நெற்றியில்
தடவி
சிறு ரொட்டித்துண்டினை
வீசுகையில்

உதறிய மயிரினை
எடைக்குப் போடும்
சலூன்கடைகாரனின்
தயக்கத்திலும்
எட்டிப்பார்க்கிறது
பத்து பைசாவிற்கு பிரயோசனமில்லா
கௌரவ நிழலொன்று

---------

கல்லிடுக்கில் கரைந்து கிடக்கின்ற
நிழல்போலத்தான்
பலரின் வாழ்வும்
மழையோ வெயிலோ
கரைதல் மட்டும் நிறுத்தப்படுதலில்லை

நிழலை பின்னிப்பிணைந்த
ஒரு இருளை
நான் தினந்தோறும்
பாதத்தின் அடியில் ஈன்றெடுக்கின்றேன்

ஆனால்
ஆணாய் பிறந்துவிட்டேன்

வழக்கத்தத்திற்கு மாறாய்
எனது நினைவுகள் பிதிங்கி
கோடுகளாய் மூளை சேர்கின்றன
ஆனாலும்
மறந்தபோன நினைவுகளின்
கோடெல்லாம்
வடுகளாய் மாறியதோர்
நினைவுச் சுவடுகளாய் என்னுள்ளே..

இடதும் வலதுமான
இரு கண்களை பெயர்த்தெடுத்து
மூன்றாம் கண்
முளைத்தெழுகிறது
மூடிய மனங்களின்
பொய் காட்சிகளை கண்டு களித்திட
வண்ணமெல்லாம்
கரு வண்ணமாய் போய் தீர்கிறது
முளைத்த கண்ணின்
இமை முடிபோல்..

--------

அரக்கபரக்க ஆவிப்பரப்பறக்கும்
ஹோட்டலில்
முன் இருக்கைக்கும்
பின் இருக்கைக்கும்
இடையே உலாவுகிறது
பசியெனும் ஓர் பறவை

-------

காதலிசம்

ஒரு மௌனத்திற்கு இரண்டு இதழ்கள்
ஒன்று
உண்மையை பேசுகிறது
மற்றொன்று
உன்னை மட்டும் பேசுகிறது
நானாய்...

------

மணிக்கட்டி
சென்ற நாய்க்குட்டிக்கு
இன்றும் 'ஜிம்மியென்றுதான் பெயர்

*

நன்றியை அவ்வப்போது
நாயின் சாயலில்தான்
பிறப்பிக்கின்றனர் பலரும்

*

கதவிற்கு உள்ளே
சிங்கமாகவும்
திறந்துவிட்டதும் பூனையாக
உருவெடுக்கிறது
மனிதரின் வளர்ப்பில் முடியப்பட்ட
நாய்க்குட்டி

*

சிறகினை கழட்டிவிட்டு
நாவினை தொங்கலிட்டு
அழகாய் இருந்தாலும்
அசிங்கமென வெளியே வந்து
கழித்துவிட்டு செல்கிறது
பாசக்கார நாய்க்குட்டி

*

புரையள்ளி வீசியும்
உண்ணாத நாயக்குட்டிக்கு
நெற்றியில் தடவியதும்
அமர்ந்துவிடுகிறது

பாசமெனும் நன்றியின் இடம்

--------

மழை போர்த்திய குடை
ஒரு காளானாக உருபெறுகிறது
துளிகள் குழந்தையாய்
தவழத்தொடங்கின

நிறம் போர்த்திய வானம்
துளிகளாய் கரைவதற்குள்
மொத்த வண்ணத்தையும் விழுங்கித்
தீர்த்தன
ஆ வென பசிப் போர்த்திய
நீர் நிலைகள்
நீந்திக் களிப்பதற்கு
ஒரு துடுப்பு மட்டும் போதுமானது
செதில்கள் இல்லாத
மீன்கள் போர்த்திய எனக்கு

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.



# தும்பி தியானம்

நீண்ட மௌனத்தில் ரயில் சத்தம்
எட்டிக்குதிக்கும் மலை உச்சியில்
தும்பி தியானம்
அருவிக்குள் ஆற்றாமை
அழுவது தான் ஞானம்
நிற்காத பேருந்தை ஓட்டுபவன்
ஜன்னலோர பயணி
அவன் நகர்ந்து விட்டான்
சோம்பேறி நிழல் இன்னும் நிற்கிறது
நம்பினோர் வடகம்
நயம்படக் கொத்தும் காகம்
நன்றி கெட்ட நாய்
நன்றி கேட்ட மனிதன்
நன்றிக்கு அர்த்தம் வேறு
தட்டி எழுப்பினார்கள்
வரி உடைந்த வார்த்தை பலி
மூச்சு வாங்கும் மேடைப்பேச்சு
ஆறு கடந்தவன்
அப்பாடா யாவும் கடக்கிறான்

*

## நீலம்தானே மஞ்சள்

இப்படித்தான் என்று
எதுவுமில்லை
இப்படியும் தான் என்பது
அதுவுமில்லை
தற்செயலா என்றால்
திட்டமிடலை என்ன செய்ய
ஒன்றிலிருந்து ஒன்று என்றால்
அந்த ஒன்று எந்த ஒன்று
இருப்பது இருந்தது
என்கிறதை நம்பவா
இல்லாததும் இருக்கிறது
என்பதை என்ன செய்வது
அறுபட்ட விதிகளிலும்

விதி உண்டு என்கிறதே
மாறுபட்ட விதி
மஞ்சள் நிறத்தை
நீலமாக்கி இருந்தால்
நீலம்தானே மஞ்சள்
நிலம் வீழும் மழைத்துளிகள்
குடை திறந்தால் வானம் ஏறுமா
தன் வாலுக்கு நாயே சுமை
வௌவாலுக்கு பூமிதான் தலைகீழ்
ஈசலுக்கு நேற்றில்லை
நாளைக்கு நாள் இல்லை
துறவி ஆகி விட்டாய்
தவம் எதற்கு மரம் எதற்கு

*

## பதிலி

கேட்கிறார்கள்
பார்க்க நினைக்கையில்

வருகையிலும் செல்வதுண்டு

பரிசுத்தத்துக்கு
பச்சை ஆடை சரியாகிறது

சுவரொட்டிகளில்
சித்தாந்தம் நடக்கிறது

சிங்கத்தின் தலைக்கு
மானுட ஆசை

பதிலுக்கு முன்னே அடுத்த கேள்வி

இரண்டாம் கோட்டுக்கு
நான்கைந்து புலிகள்

இருளுக்குள் காத்திருப்பு
பிறை வாங்கும் ஒற்றையடி

எழுத்தை பேச வேண்டி இருக்கிறது
பேச்சில் எழுத்துப் பிழை இயல்பு

நகர்வலம் இடதிலிருந்து
நாய் வாலுக்கு பூனை நடை

நந்தவன காவலாளி ஆண்டி
சிந்தைக்கு சால்வை போற்றி

பதிலிகளால் ஆனவர்கள் நாம்

— கவிஜி

---

## எனக்குப் பின்னாலிருந்து

என் கண்களைப் பொத்துவது
மகளென்றறிந்தும்
யார் யார் பெயரையோ
உச்சரிக்கிறேன்.
அதை மகிழ்ந்து ரசிக்கிறாள்
மகள்.

நீண்ட இரவு
உறக்கம் தொலைத்த விழிகள்
ஓயாமல் பேசிக் கொண்டிருக்கும்
மின்விசிறி.

உச்சி மண்டைக்கு நேராய்
உதயன்; அம்பெனத்தைக்கும்
மூங்கில் மரங்கள்.

ஒரு கவிதைக்குள் அடக்கமுடியாத
அத்தனை பெரிய அண்டத்தை
ஒற்றைப் பனித்துளியில்
அடக்கியது புல்.

என்னவளின் உதிர்ந்த
கூந்தல் முடிகளை மயிலிறகாய்
பத்திரப்படுத்தி இருக்கிறேன்
என் கவிதைப் புத்தகத்தில்.

வெள்ளத்தில் உருண்டு வந்த
கூழாங்கல் எல்லோரிடமும்
தன்னை மலையென்று
சொல்லிக் கொள்கிறது.

கவிதைக்குள் கருவாய்
வாழ்கிறேன்; வேறெதற்குள்ளும்
என்னை வலிய திணிக்காதீர்கள்.

என்னிடம் வெளிச்சமில்லை
என் நலம் விரும்பியே...
நீயாவது ஒரு சுடரைக் கொடு.

கொஞ்சம் கொஞ்சமாய்
நகர்ந்து வந்து
என் பக்கத்து இருக்கையை;
முழுமையாய் ஆக்கிரமித்தது
ஒற்றைப் பனையின் நிழல்.

— பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



---

## வண்ணக் கலவை சிறகுடைய

வானத்துத் தேவதையென
பேராசை மனிதனின் கரத்தில்
வந்தமர்கிறது பறவை
எண்ணங்களில் புலம்பும்
இயலாமைகள் போக்கிட
ஒற்றைச் சிறகுதிர்த்து
மனிதனுக்கு நீட்டியது பணத்தை.
தேவைகளின் நிர்பந்தங்கள் நெருக்க
சிறகின் ஆணிவேரைத் தொட்டு
உதிர்க்கத் தொடங்குகிறான்
இறகின் சுமைகள் ஏற ஏற
இன்னும் தீராக் தேடலில்
பறவையை எழும்பவிடாது
நசுக்குகிறது பேராசைப் பிசாசு
தனக்கான வானத்தைத் தேடும்
பறவையின் மனதில்
தன்னையே இழந்துவிட்ட
ஆற்றாமை பெருகத் தொடங்கியது.

## நான் கூடு கட்டப் பார்க்கிறேன்

நீ வீடு கட்டப் பார்க்கிறாய்
நிலத்தில் வேரூன்றும்
உனக்கான மனதில்
வானத்தை அளக்கத் துடிக்கும்
எனக்கான இறகுகள்
கட்டி வைக்கப் படுகையில்

நிம்மதியும் நிலைப்பாடும்
கணிக்கத் தெரியாத
காலநிலையைப் போல
ஊஞ்சலாடுகிறது
உனக்கும் எனக்குமான நேசம்

தட்டில் காந்தி விழுமா என
கவலையில் காத்திருக்கும்
பிச்சைக்காரனிடம்
பாடப்புத்தகத்தில் அச்சிடப்பட்ட
காந்தியைக் காட்டி
சிரிக்கிறாள் மகள்.

நீங்கள் உருவாக்கிய
பிம்பத்தின்
வெளிப்படாத வெளிச்சமே நான்
இருளுக்குள் தேடும்
பொறுமையோ
வெளிச்சத்தின் போக்கில்
ஒளிந்து கொண்ட அச்சமோ
என்னை வெளிப்படுத்தப் போவதில்லை.

—

இளையவன் சிவா
கைபேசி: *9965359130*



---

# உயிர்க்கும் பறவை

கணிதச் செய்கை வழி
ஒருமுறை தெரிந்தால் போதும்

துருவளையில் துருவுதல்
மறந்து போகாது

ஓதப்பழகினால் இனித் திக்காது

அறிமுகம் முடிந்தால் அவர்கள்
தோழர்களே

பருவநிலை பலவானாலும் பூலோகம்
ஒன்றே

ஆன்மாக்கள் இருவிழிகள்
நேசம் ஒரே பார்வை

வேதனைகள் வேரோடினாலும்
இதயத்திற்கு எப்போதும்
பால்யத்தின் வயது

சீண்டல்கள் சிறகுகளாய் உயிர்த்துப்
பறவையாகி எழும்

முழுதாய் பிரியங்கொண்ட பிறகு
பகையில்லை

மனநிலைக்கேற்ப மாறுதல்
மெய்நேசத்தில் இருக்காது

இதயங்கள் பெயர்வடைந்த பின்னேது
கணக்கும் வழக்கும்?

உனக்கு நான்

எனக்கு நீ
அவ்வளவுதான்

நான் பிரபஞ்சம்
நீ திசையற்ற வெளி
நாமே பேரண்டம்

## குறுங்கவிதைகள்

பரம்பரை ஆதனம்
பிரிக்கப்பட்டு விடுகிறது
உறவின் கரங்கள்

மனதில் பாரம்
மெதுவாக இறங்குகிறது
விழிகளில் கண்ணீர்

அன்பெனும் தலைப்பில்
சிறப்புக் கருத்தரங்கம்
முதியோர் இல்லத்தில்

தனியாளாய் உழைத்தான்
தனிமையில் வாடுகிறான்
சொத்துப் பங்கீட்டின் பின்

நிலத்தடி நகரம்
ஒற்றுமையான சமூகம்
எறும்புப்புற்று

திக்குமுக்காடுமோ?
மலர்த்தோட்டம் நுழையும்
பட்டாம்பூச்சியின் சிறுபசி

பயணத்திற்காக சேமித்தேன்
வேகமாக பயணமாகி விட்டது
பணம்

வளரும் விஞ்ஞானம்
விலை போனது
விளைநிலம்

பெய்யாத மழை
தேங்குகிறது
உழவன் கண்களில் கண்ணீர்

கரடு முரடான ஏற்றம்
கடினமான பயணம்
அழகான காட்சி மலையுச்சியில்

—



*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.

## துணை இணையானது

சென்னை திரைபடக்கல்லூரியில் இயக்கம் பிரிவில் படித்து முடித்து விட்டு உடனடியாக ஒரு படத்தை இயக்கனும் என்ற முடிவோடு வெளியே வந்தோம்... நானும் நண்பன் கௌதமும்.. படிக்க சேர்ந்த ஆண்டிலிருந்தே, முதல் நாளில் நண்பனானவன்.. கௌதம்.. வித்தியாசமாய், சிந்திப்பவன்.. ஆங்கில பட அளவிற்கு கதைகளை நினைத்த மாத்திரம், சொல்லக்கூடியவன்..

நான் சங்கர்.

நம்ம மண்ணுக்கேத்த, திகிலூட்டும் கதைகளைதான் இயக்க வேண்டும் என்ற வெறியோடு இருப்பவன் நான். கடைசி நாளில், கல்லூரி வளாகத்தை விட்டு வெளியே வர முடியாமல் தவித்துப் போனோம். எல்லோரும் போய் விட்டார்கள், நானும் கௌதம் மட்டுமே கல்லூரி பூங்காவில் உட்கார்ந்து இருந்தோம்.

"சொல்லு சங்கர்... அடுத்து எப்படி தொடங்க போற.. யார்ட்டாயாவது இன்னும் வேலை கத்துக்கனுமா..? இல்லை.. நம்ம கத்துக்கிட்டதே போதுமா..? கௌதம் சொன்னதும்,

"இன்னும் என்ன இருக்கு? இந்த மூனு வருசத்துல, நாம நிறைய படத்தை பார்த்திட்டோம். இதை விட என்ன இன்னும் கத்துக்கனும்? கௌதம்..? எனக்கு அப்படி, தோணலை... இதை விட, ஒரு யோசனை தோணுது. இது சரியா வருமா..? சொல்லு.. நாம ஏன் இணைந்து படம் இயக்க கூடாது? உனக்கு அப்படி எதுவும் தோணலையா?" சங்கர் சொன்னதும் அவனையே பார்த்த கௌதம்...

"நல்ல யோசனை.. சங்கர்.. பாரு எனக்கு தோணவேயில்லை.. இது மாதிரி உனக்குதான்டா யோசனை வரும். உண்மையிலே நல்லா, இருக்கும்ல..."

"ஆமாம் கௌதம்.. உன் கல்லூரிக்கான படம் பார்த்தேன்.. என்ன மாதிரி திரைக்கதை.. வாய்ப்பே இல்ல.. ஒரே ஒரு கொலையை வச்சு, இரண்டே கதாபாத்திரத்தில அரை மணி நேரம் அசத்தி இருந்த நான் ரொம்ப ரசிச்சேன்.

இந்த படம் நிச்சயம் பேசப்படும்னு நினைச்சேன். அதே போல எல்லோருக்கும், படம் பிடிச்சது.. எனக்கு கொஞ்சம், பொறாமையா கூட இருந்துச்சி.. உன் படம் தானே இந்த ஆண்டிற்கான சிறந்த படமாக தேரவாச்சு... உண்மையா அப்பத்தான்.. இந்த யோசனையே வந்துச்சு... நாம இணைஞ்சே.. தயாரிப்பாளரை தேடுவோம்.. நிச்சயம் கிடைப்பாங்க.. நமக்கு திறமை இருக்கு'னு நாம நம்புவோம்.. " சங்கர் சொல்லி முடிச்சதை, சிரித்தபடி ஏற்றான் கௌதம்.

சேர்ந்தே தேடினார்கள்.. இதுவரை எட்டுப்பேரை, பார்த்துவிட்டார்கள். இருவரும் சேர்ந்து, எழுதிய கதை, திரைக்கதை வசனத்தை சொன்னார்கள். ஒவ்வொரு தயாரிப்பாளரும், ஒரு வகையாய் கேட்டார்கள்..

"எல்லாம் சரி தம்பி.. இதுல மக்களோட ரசிப்புக்கு ஏத்தவாறு குத்து ஆட்டம் எங்க வைப்பீங்க..?" கேட்ட தயாரிப்பாளரை, வெறித்து பார்த்துவிட்டு வெளியே வந்தார்கள்.. இன்னொருத்தரோ.. தட்டு நிறைய, வெங்காய பகோடாவை, வைத்துக் கொண்டு, அசைப்போட்டவாறே, கையில் மதுவோடு.. கதை முழுக்க, கேட்டுவிட்டு சொன்னான்.

"தம்பிகளா.. இதுல ஒரு கற்பழிப்பு காட்சி இல்லையே..? ஒரு விலை மாது கதையை சொன்னீங்க.. ஆனா அந்த

காட்சி இல்லேனா எப்படி..?" எழுந்து வெளியே, வந்தவுடனே.. கௌதம் சத்தம் போட்டான்.

"என்னடா இவனுங்க.. பணத்த வச்சி இத்தனை ஆட்டம் போடறானுங்க.. நல்ல படமே எடுக்க தோணாதா இவனுங்களுக்கு..?" சங்கர் அவனை அமைதிப் படுத்தினான்.

"இவங்களை சொல்லி என்னடா பண்ண.. நம்ம மக்களோட ரசனை மாறி கிடக்கே..?"

"மக்கள் ரசனையை இவங்கதானடா.. மாத்தி இருக்காங்க.. எதை கொடுக்கறோமோ.. அதுவா மாறுறவன்தான்.. மனிதன்" கோபமாய், சொன்னான்.. எதிரே இருந்த தேநீர் கடையில, தேநீர் சொல்லிவிட்டு காத்திருந்தார்கள்.. இவர்களையே, பார்த்திருந்த ஒருவன் கேட்டான்..

"என்ன ஐயா.. போலி நிறுவனத்துல போய் கதை சொல்லிட்டு.. வர்றீங்க.. இவன் உப்புமா, நிறுவனத்த விட மோசமானவனாச்சே.. தம்பிங்களா.. திரைப்படக் கல்லூரியில் மாணவர்களா நீங்க?

உங்களுக்கு ஒரு வழி சொல்றேன்.. கேக்கறீங்களா.." அவன் கேட்டதும், அவனையே சந்தேகமாய் பார்த்தார்கள்.

"என்னப்பா அப்படி பாக்கறீங்க.. சந்தேகப்படாதீங்க.. இந்த கோடம்பாக்கத்து நிறுவனங்கள் எல்லாம் நுழைஞ்சு வெளிய வந்தவன் நான்.. உப்புமா நிறுவனங்களில் இருந்து பிரியாணி நிறுவனம் வரை பார்த்தவன். அம்பது, அறுபது படத்துக்கு 25 இயக்குனர்களிடம் வேலை பார்த்தவன். இருந்தாலும், இந்த லட்சிய கதையை, நெஞ்சுலேயும் காகிதத்திலேயும் சுமந்திட்டு திரியறேன்.. ஆனா வாய்ப்புதான் கிடைக்கல, கிடைக்கவும் கிடைக்காது.

நீங்க வளர்ற புள்ளங்க.. ஏதோ சாதிக்கனும்'னு, நினைப்பீங்க.. உங்க கதையை ஒரு குறும்படமா எடுங்க.. பத்து நிமிச கதைய மட்டும் எடுத்து காட்டுங்க மொத்த கதையும் எடுக்க வேணாம்.. மூனு காட்சி மட்டும் எடுங்க. அதை யுட்யுப்ல போடுங்க, உங்க படத்தோட முகவரியை நான் தர்ற முகவரிக்கு, அவருக்கு இணைச்சு விடுங்க.. நல்லா இருந்தா அந்த தயாரிப்பாளருகிட்ட இருந்து உங்களுக்கு அழைப்பு வரும். இல்லேனா, இந்த கதையை ஏறக்கட்டி பரண் மேல போட்டுறுங்க.. திரும்ப முயற்சித்து வேற ஒரு கதைய எடுத்து போடுங்க.

ஏன் நீங்க எடுக்க வேண்டியதுதானேனு கேக்கறது எனக்கு கேக்குது. எனக்கு பெரிய நிதி வசதி இல்ல தம்பிகளா.. சின்ன பசங்க நீங்க முயற்சி பண்ணுங்க. வெற்றினா என்னை கூப்பிடுங்க.. உங்க கிட்டேயும், நான் துணை இயக்குனாரா இருக்கேன்..." சொல்லிவிட்டு ஒரு வணிக அட்டையை கொடுத்துவிட்டு சினேகமாய் சிரித்துவிட்டு போய்விட்டான்.

சங்கரும், கௌதமும் பார்த்துக் கொண்டார்கள்.. அதில் 'செய்து பார்த்தாலென்ன?' என்ற கேள்வி இருந்தது. உடனடியாக, நிதிநிலையை தயாரித்தார்கள்.. குறைந்தது ஒரு இருபதினாயிரமாவது வேண்டும்.

"அது பிரச்சினை இல்லை.. அம்மாவே தந்துவிடுவார்கள் சங்கர். ஆனால் அவரு சொன்னதை செய்துதான் பாக்கனும்னா நான் தயார்" கௌதமிற்கு, கை கொடுத்தான் சங்கர்.. அடுத்து பரபரவென, இயங்கினார்கள்.

தங்கள் காணொலி கருவி நண்பன் ஸ்ரீராமையும், கத்தரிப்பு நண்பன் ராஜ்ஜையும் என அத்தனை பேரையும் தங்கள் கதைக்காக ஒன்றுப்படுத்தி, ஒரு நாளில் படபிடிப்பை தொடங்கினார்கள். பெரிதான காணொலி கருவி இல்லை.. குறும்படத்துக்கு தேவையான உபகரணங்களை குறைந்த செலவில் வாடகை எடுத்து, நான்கு நாளில் அரைமணி நேர படத்தை எடுத்து, அதில் கால்மணி நேரம் படத்தை, சிறப்பாய் செதுக்கி, ராசாவின் சில இசை கோர்வையை அங்கங்கே சேர்த்து, சிறப்பான ஒரு திருப்பத்தை வைத்து தொடரும் என முடித்தார்கள்.

கௌதம் வீட்டில் அத்தனை பேரும் படத்தை போட்டு பார்த்து தங்களுக்குள் ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டனர். அதை முகநூலில் மறுநாள் அந்த தயாரிப்பாளரின் முகவரியையும் சேர்த்து பதிவு செய்தார்கள். யூட்யுபிலும் இணைத்தார்கள். ஒரு வாரம் காத்திருந்தார்கள், விருப்பங்களும், கருத்துகளும் தெறித்து விழுந்தன. செய்தி ஊடகங்கள் இதை தாங்களாகவே வெளியிட்டு குறும்படத்தை விமர்சித்து செய்தியாக்கினர்.

எட்டாம் நாள் காலை, அந்த லட்சிய துணை இயக்குனர் தொடர்பில் வந்தான்.

"தம்பி சொன்னபடியே பிரமாதமா எடுத்திட்டீங்க.. கவலையே படாதீங்க, எந்த குறும்படமும் இந்தளவு பார்வைகளை எட்டியதில்லை. உங்க கதை ஆரம்பமே அசத்தல்.. கவலைபடாதீங்க.. அடுத்து படம்தான், வாய்ப்பா வரும்.." சங்கர் சொன்னான்.

"அண்ணே.. உங்க வாய்ச்சொல் பலிக்கட்டும்ணே.."

பத்தாம் நாள் காலை ஏழுமணிக்கு.. சங்கர் கைப்பேசிக்கு அந்த 'அழைப்பு' வந்தது.

சங்கர்: "ஆமா ஐயா.. நீங்க?"

"ம்ம்.. நான் தயாரிப்பாளர்.. தேவா தேவா பிலிம்ஸ்..."

"ஐயா சொல்லுங்க.." பதட்டமாகி பேசினான்.. சங்கர்.

"ம்.. அந்த குறும்படம்.. காலைல'தான் பார்த்தேன்.. நல்லா இருந்துச்சு.. மக்கள் ரொம்ப ரசிக்கறாங்க.. நானும் ரசிச்சேன்.. கூட அது யாரு.. கௌதம்.. உங்க நண்பரா?"

"ஆமா சார்.. என் கூட திரைப்பட கல்லூரியில படிச்சவன்.. சேர்ந்தே படம் பண்ணலாம்'னு.."

"அப்ப ஒன்னு செய்ங்க.. நம்ம அலுவலகம் வாங்க.. பேசுவோம்.. நம்ம தயாரிப்புல அடுத்து  உங்க படம் தான்.." வைத்து விட்டார்.. சங்கருக்கு சொல்ல முடியாதமகிழ்ச்சி. அம்மாவை, தட்டாமாலை சுற்றினான்.. உடனே கிளம்பி போனான்.. கௌதமும் ஆரவாரித்தான்..

கிளம்பி போனர்கள்.. மொத்த கதையும், உணர்ச்சிகரமாய் சொன்னார்கள்.. இரண்டு மணி நேரம், கதை கேட்ட தயாரிப்பாளர் தேவன்..

காசோலை எழுதி, எழுந்து நின்று கண்களை மூடி பிரார்த்தனை செய்து சாமி படத்தின் கீழே வைத்து வணங்கி இருவரிடமும் தந்தார்.

"சீக்கிரம் படபிடிப்பை தொடங்க செய்யுங்கள். இப்போ எப்படி கதையை, சொன்னீங்களோ.. அதே போல, வரனும் இயக்குனர்களே.. என் தயாரிப்புல இந்த படத்தை எந்த படமும் முந்த முடியாம இருக்கனும்.." என்று வாழ்த்தியனுப்பினார்.

மகிழ்ச்சியுடன் வெளியே வந்தவர்களை சிரித்தபடி வரவேற்றான் அந்த துணை இயக்குனர் மணி.

"தம்பிகளா சாதிச்சிட்டீங்களா.. உங்க முகமே சொல்லுதே.. தினம்.. இங்க வருவேன்.. நீங்க வர்றீங்களா'னு பார்க்க.. இன்னிக்கு வந்துட்டீங்க... ரொம்ப மகிழ்ச்சி.." பேசியவனின், கையை பிடித்த, சங்கரும் கௌதமும்.. சொன்னார்கள்..

"அண்ணே, இந்த படத்துல நீங்க இணை இயக்குனர்.. உங்களின் அனுபவம் எங்களுக்கு தேவை.. மறுக்காதீங்க" என்றார்கள்.. அந்த துணை இயக்குனர் கண்களில் கண்ணீர் பெருகி நின்றது. இனி அவரும் இயக்குனரே..

— இரவிச்சந்திரன்,
சென்னை.




**S. ஹரிதா,**
5ஆம் வகுப்பு, ஸ்ரீ பாரதி வித்யாலயா பள்ளி, மன்னார்குடி.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.